முன்னுரை

சிறையிருப்புக்கு முன்பு தீர்க்கதரிசனம் சொன்ன சிறிய தீர்க்கதரிசிகளில், செப்பனியாவின் புஸ்தகம் கடைசியாகக் கோர்க்கப்பட்டிருக்கிறது. இவர் எரேமியாவின் காலத்திற்கு சற்று முந்திய காலத்தில் ஊழியம் செய்தவர். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன காலத்தில், எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார்.

கல்தேயர் மூலமாய் யூதாவுக்கும் எருசலேமுக்கும் பொதுவான அழிவு வரும் என்று செப்பனியா தீர்க்கதரிசனம் சொன்னார். யூதர்களுடைய பாவங்களை அவர்களுக்கு விளக்கிக் காண்பித்தார். யூதர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்று அவர்களை கர்த்தருடைய நாமத்தினால் எச்சரித்தார்.

யூதாதேசத்தைப்போலவே, மற்ற தேசங்களும் பாவம் செய்தால், அவர்களுக்கும் அழிவு வரும் என்று, செப்பனியா அண்டை தேசத்தாரையும் எச்சரித்தார். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனாலும், ஏற்ற காலத்திலே அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு சந்தோஷமாகத் திரும்பி வருவார்கள் என்னும் ஆறுதலான வாக்குத்தத்தங்களையும் செப்பனியா அவர்களுக்கு சொன்னார்.

1 அதிகாரம்

புஸ்தகத்தின் தலைப்பு (செப் 1:1). கல்தேயர் மூலமாய் யூதாவுக்கும் எருசலேமுக்கும் அழிவு வரும் (செப் 1:2-4). யூதாமனுஷருடைய பாவங்கள் (செப் 1:5,6). கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மேலும், எருசலேமின் குடிகள் மேலும் வரும். யூதர்கள் தங்கள்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கவேண்டும். அல்லது அதை சந்திப்பதற்கு தங்களை ஆயத்தம்பண்ணவேண்டும். அவர்களுடைய பாவங்கள் அவர்களை அழித்துப்போடும். அவர்கள் தங்களைத் தாங்களே நியாயந்தீர்த்துக்கொள்ளவேண்டும். கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை யூதாவின் மனுஷருக்குச் சொல்லுகிறார்.

யூதர்கள் அதிகமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் மௌனமாயிருக்கவேண்டும் (செப் 1:7-9). யூதர்கள் மத்தியிலே கூக்குரலின் சத்தமும், அலறுதலும், சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகும் (செப் 1:10-18). யூதருடைய சிறையிருப்பு சமீபித்திருக்கிறது. செப்பனியா தீர்க்கதரிசி யூதர்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை ஏற்ற வேளையிலே சொல்லுகிறார்.

யூதா அழியும்
செப் 1:1-6

செப் 1:1. ஆமோனின் புத்திரனாகிய யோசியா என்னும் யூதா ராஜாவின் நாட்களிலே, எஸ்கியாவின் குமாரனாகிய ஆமரியாவுக்குக் குமாரனான கெதலியா என்பவனுடைய மகனாகிய கூஷின் குமாரன் செப்பனியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்.

செப் 1:2. தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

செப் 1:3. மனுஷரையும் மிருகஜீவன்களையும் வாரிக்கொள்ளுவேன்; நான் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், இடறுகிறதற்கேதுவானவைகளையும் துன்மார்க்கரோடேகூட வாரிக்கொண்டு, தேசத்தில் உண்டான மனுஷரைச் சங்காரம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

செப் 1:4. நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடேகூட கெம்மரீம் என்பவர்களின் பேரையும்,

செப் 1:5. வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும்,

செப் 1:6. கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்.

இந்தப் புஸ்தகத்திற்கு "செப்பனியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்" என்னும் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. வசனம் பரலோகத்திலுள்ள தேவனிடத்திலிருந்து செப்பனியாவுக்கு வந்திருக்கிறது. இது மனுஷரிடத்திலிருந்து அவருக்கு வந்த வார்த்தையல்ல.

செப்பனியா என்னும் பெயருக்கு "கர்த்தருடைய ஊழியக்காரர்" என்று பொருள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளுக்கு, தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறார். செப்பனியாவின் சந்ததியைப்பற்றி இங்கு விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

செப்பனியாவின் முன்னோர்களில் நான்குபேர் இங்கு விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர் எஸ்கியாவின்குமாரனுகிய ஆமரியாவுக்குக் குமாரனான கெதலியா என்பவனுடைய மகனாகிய கூஷின் குமாரன்.

எஸ்கியா என்னும் பெயர் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா என்னும் பெயரோடு ஒத்துப்போகிறது. "இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலாவின் குமாரன் ஒசெயாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதாவுடைய ராஜாவின் குமாரனாகிய எசேக்கியா ராஜாவானான்" (2இராஜா 18:1).

செப்பனியா ஆமோனின் புத்திரனாகிய யோசியா என்னும் யூதாராஜாவின் நாட்களிலே தீர்க்கதரிசனம் சொன்னார். இது யோசியா ராஜாவின் பன்னிரண்டாம் வருஷ ஆட்சிக்காலமாகும். இவருடைய ஆட்சிக்காலத்தில் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. யோசியா ராஜா யூதாதேசத்திலுள்ள சிலைகளையெல்லாம் அழித்துப்போட்டார்.

செப்பனியா யோசியா ராஜாவினுடைய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் தீர்க்கதரிசன ஊழியம் செய்தாரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனாலும் யூதாதேசத்தில் ஏற்பட்ட ஆவிக்குரிய மறுமலர்ச்சியில், செப்பனியாவின் தீர்க்கதரிசன ஊழியத்திற்கும் முக்கிய பங்கு உண்டு என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யூதாவும் எருசலேமும் அதிகமாகப் பாவம் செய்கிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபமும், அவருடைய நியாயத்தீர்ப்பும் அவர்கள்மீது வந்திருக்கிறது. யூதாதேசத்திற்கு அழிவு சீக்கிரமாய் வரப்போகிறது என்பதே செப்பனியாவின் பொதுவான செய்தி.

செப்பனியா ஆரம்பத்திலேயே "தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (செப் 1:2) என்று தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்ல ஆரம்பிக்கிறார்.

இந்த வாக்கியத்தைத் தொடர்ந்து, "மனுஷரையும் மிருகஜீவன்களையும் வாரிக்கொள்ளுவேன்; நான் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்துமச்சங்களையும், இடறுகிறதற்கேதுவானவைகளையும் துன்மார்க்கரோடேகூட வாரிக்கொண்டு, தேசத்தில் உண்டான மனுஷரைச் சங்காரம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (செப் 1:3) என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

இவ்விரண்டு வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. யூதாதேசத்திற்கு மொத்தமாக அழிவு வரும். அவர்களுக்கு சர்வநாசமும், சர்வமோசமும், சர்வசங்காரமும் உண்டாகும்.

வானத்திலே உயர பறந்தாலும், அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது. அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே ஒழிந்துகொண்டாலும், அவர்களாலும் தேவனுடைய கோபத்திற்கு தப்பிக்க முடியாது. கர்த்தரிடத்திலிருந்து வரும் அழிவு, யூதாதேசம் முழுவதும் வரும். "தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலுமாய் வாரிக்கொள்வேன்" என்றும், "தேசத்திலுண்டான மனுஷரை சங்காரம்பண்ணுவேன்" என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாதேசம் பாழும் வனாந்தரமுமாகும். தேசத்திலே ஜனங்கள் குடியிருக்கமாட்டார்கள். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை மாத்திரமல்ல, தேசத்திலுள்ள மனுஷரையும் சங்காரம்பண்ணுவார். அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து வாரிக்கொள்ளப்படமாட்டார்கள். அவர்கள் தேசத்திலிருந்து வாரிக்கொள்ளப்படுவார்கள்.

யூதாவிலே கர்த்தர் அறியப்பட்டிருக்கிறார். எருசலேம் கர்த்தருடைய வாசஸ்தலம். இவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கரம் இவர்களுக்கு விரோதமாக நீட்டப்படுகிறது. "ஆகையினால் இடறுகிறதற்கு ஏதுவானவைகளை துன்மார்க்கரோடே கூட வாரிக்கொள்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விக்கிரகாராதனைக்காரருடைய விக்கிரகங்களை கர்த்தர் வாரிக்கொள்வார். இஸ்ரவேல் வம்சத்தாருடைய இடறுதலுக்கு இந்த விக்கிரகங்களே காரணமாயிருந்தது. ஆகையினால் கர்த்தருடைய கோபம் விக்கிரகங்கள்மீதும், விக்கிரகாராதனைக்காரர்மீதும் வருகிறது. இடறுகிறதற்கேதுவான விக்கிரகங்களையும், விக்கிரகாராதனைக்காரரையும் கர்த்தர் வாரிக்கொள்வார்.

கல்தேயர்கள் யூதாதேசத்திற்கு விரோதமாக வருவார்கள். யூதாதேசத்திலே பாகாலுக்கு ஏராளமான விக்கிரகங்கள் உள்ளது. கல்தேயர்கள் பாகாலின் விக்கிரகங்களையெல்லாம் வாரிக்கொள்வார்கள். அல்லது பாகாலை ஆராதிக்கிற விக்கிரகாராதனைக்காரர் எல்லோரையும் வாரிக்கொள்வார்கள்.

"நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதை சங்காரம்பண்ணுவேன்" (செப் 1:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆசாரியர்களோடே கெம்மரீம் என்பவர்களின் பேரையும் சங்காரம்பண்ணுவார். யோசியாவின் காலத்தில் ஏற்பட்ட ஆவிக்குரிய மறுமலர்ச்சியின் சரித்திரத்தில், இதைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

"யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமைச் சுற்றிலும் மேடைகளின்மேல் தூபங்காட்ட, யூதாவின் ராஜாக்கள் வைத்த பூஜாசாரிகளையும், பாகாலுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகங்களுக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் தூபங்காட்டினவர்களையும் அகற்றிவிட்டான்" (2இராஜா 23:5).

கெம்மரீம் என்பவர்கள் பாகாலின் பூஜாசாரிகள். "கெம்மரீம்" என்னும் பேருக்கு "கருப்பு நிறத்தவர்" என்று பொருள். இவர்கள் கருப்பு வஸ்திரங்களை அணிந்திருப்பார்கள். இவர்களுடைய முகங்கள் கறுத்துப்போயிருக்கும். இவர்கள் மோளேகுக்கு பிள்ளைகளை பலியாகச் செலுத்தும்போது, அந்தப் பிள்ளைகளை இவர்களே அக்கினியில் தகனிப்பார்கள். இவர்கள் எப்போதும் அக்கினிக்கு அருகாமையில் வேலை செய்வதினால் இவர்களுடைய முகங்கள் கறுத்துப்போயிருக்கும்.

கெம்மரீம் என்னும் பூஜாசாரிகளே பாகாலுக்கு அருகாமையிலிருந்து, அதற்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள். யூதாதேசத்திலே இவர்களோடுகூட வீடுகளின்மேல் வானசேனையை பணிகிறவர்கள் இருக்கிறார்கள் (செப் 1:5). கர்த்தர் இவர்களையும் சங்காரம்பண்ணுவார்.

கர்த்தருக்கு கொடுக்கவேண்டிய மகிமையை வானசேனைகளுக்கு கொடுக்கக்கூடாது. கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும் மகிமையையும் கல்லுகளுக்கோ, மரங்களுக்கோ அல்லது வேறு எந்த சிருஷ்டிகளுக்கோ கொடுக்கக்கூடாது.

யூதாதேசத்தில் சிலர் கர்த்தரையும் ஆராதிக்கிறார்கள், பாகாலையும் ஆராதிக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கும் பாகாலுக்கும் நடுவில் நின்று, இரண்டுபேரையுமே ஆராதிப்பார்கள். இவர்கள் கர்த்தர் பேரிலும் ஆணையிடுவார்கள். மல்காமின் பேரிலும் ஆணையிடுவார்கள். கர்த்தரைப் பணிவதுபோலவே மல்காமையும் பணிவார்கள். கர்த்தர் இவர்களையும் சங்காரம்பண்ணுவார்.

யூதாவின் மனுஷரில் அநேகர் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் கர்த்தரைத் தேடாமல், கர்த்தரைவிட்டுப் பின்வாங்குகிறார்கள். இவர்கள் கர்த்தரைக் குறித்து விசாரிப்பதில்லை. கர்த்தர் பின்மாற்றக்காரரான இவர்களையும் சங்காரம்பண்ணுவார். தேசத்திலே இவர்களுடைய பேர் நிலைத்திராதபடிக்கு, கர்த்தர் இவர்களெல்லோரையும் சங்காரம்பண்ணுவார்.

"செப்பனியா" என்னும் பெயருக்குக் "கர்த்தரால் மறைக்கப்பட்டவர்" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "செப்பனியா"க்கள்

1. தீர்க்கதரிசி (செப். 1:1)
2. லேவியன் (1நாளா. 6:36-38)
3. ஆசாரியன் (2இராஜா 25:18-30; எரே 21:1; எரே 29:25-29; எரே 37:3; எரே 52:24-29)
4. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (சக. 6:10-14)

யோசியாவின் ராஜ்யபாரம்

யூதா தேசம் விழுவதற்கும், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் எருசலேம் நகரத்தை அழிப்பதற்கும் 53 வருஷங்களுக்கு முன்பாக யோசியா ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்தான். இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் அசீரியருடைய சிறையிருப்புக்கு உட்பட்டார்கள். அந்தச் சிறையிருப்புக்கு 80 வருஷங்களுக்குப் பின்பு யோசியா ராஜ்யபாரம் பண்ண ஆரம்பிக்கிறான்.

யோசியாவின் காலத்து மறுமலர்ச்சி முடிவு பெறுவதற்கு முன்பாகச் செப்பனியா தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பிக்கிறார். இவருடைய காலத்தில் பாகாலில் மீதியானவைகள் இன்னும் அழிக்கப்படவில்லை. (செப். 1:1,4; 2இராஜா 23) செப்பனியாவின் தீர்க்கதரிசனம் யோசியாவினுடைய ஆட்சிக் காலத்தில் 12 ஆவது வருஷத்திற்கும், 18 ஆவது வருஷத்திற்கும் இடையில் கூறப்பட்டிருக்க வேண்டும். எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகியோரின் காலத்தில் செப்பனியாவும் ஊழியம் செய்து வந்தார்.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் (செப். 1:2).
2. மனுஷரையும் மிருகஜீவன்களையும் வாரிக்கொள்ளுவேன் (செப். 1:3).
3. நான் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்துமச்சங்களையும், இடறுகிறதற்கேதுவானவைகளையும் துன்மார்க்கரோடேகூட வாரிக் கொள்வேன்.
4. தேசத்தில் உண்டான மனுஷரைச் சங்காரம்பண்ணுவேன்.
5. நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டுவேன். (செப். 1:4).
6. பாகாலில் மீதியாயிருக்கிறதைச் சங்காரம் பண்ணுவேன்.
7. ஆசாரியர்களோடேகூட கெம்மரீம் என்பவர்களின் பேரையும் சங்காரம் பண்ணுவேன்.
8. வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களைச் சங்காரம் பண்ணுவேன். (செப் 1:5)
9. கர்த்தர்பேரில் ஆணையிடுகிறவர்களைச் சங்காரம் பண்ணுவேன்.
10. மல்காமின் பேரில் ஆணையிட்டுப் பணிகிறவர்களைச் சங்காரம் பண்ணுவேன்.
11. கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களைச் சங்காரம் பண்ணுவேன். (செப். 1:6)
12. கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது (செப். 1:7).
2. கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.
3. அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்.

4. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன். (செப். 1:8).

5. வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன். (செப். 1:9).

6. அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகும். (செப். 1:10).

7. வர்த்தகரெல்லாரும் சங்காரமாவார்கள். (செப். 1:11).

8. காசுக்காரர் யாவரும் வெட்டுண்டு போவார்கள்.

9. அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதித்து, வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமை செய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரை தண்டிப்பேன். (செப். 1:12).

10. அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும் (செப். 1:13).

11. அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்.

12. அவர்கள் வீடுகளைக் கட்டியும் அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்.

13. அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை.

14. கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது (செப் 1:14)

15. அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்து வருகிறது.

16. பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்.

17. அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள். அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள். (செப். 1:15-16).

18. நான் மனுஷரை வருத்தப்படுத்துவேன் (செப் 1:17).

19. அவர்கள் குருடரைப்போல் நடப்பார்கள்.

20. அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும். அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும்.

21. கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்க மாட்டாது (செப். 1:18).

22. அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் கர்த்தர் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்.

கர்த்தர் வாரிக் கொள்ளும் காரியங்கள்

வாரிக்கொள்ளுதல் என்பதற்கு "அகற்றிப் போட்டு அதை அழித்துப்போடுதல்" என்று பொருள். இந்த வாக்கியம் 3 முறை வலியுறுத்திக் கூறப் பட்டிருக்கிறது. (செப். 1:2-3)

1. மனுஷன்
2. மிருகஜீவன்
3. ஆகாயத்துப் பறவைகள்
4. சமுத்திரத்து மச்சங்கள்
5. இடறுகிறதற்கேதுவானவைகள்

"இடறுகிறதற்கே துவானவைகள்" என்னும் இந்த வார்த்தை (செப் 1:3) விக்கிரகங்களையும், தேசத்தில் அவை உண்டாக்கின அழிவையும் குறிக்கிறது. இதற்கான எபிரெய வார்த்தை "மக்ஷேலா" என்பதாகும்.

செப்பனியா தீர்க்கதரிசி யூதாவிற்கும், எருசலேமிற்கும் தீர்க்கதரிசனம் கூறுகிறார். அவர் எப்பிராயீமிற்கும், சமாரியாவிற்கும் தீர்க்கதரிசனம் கூறவில்லை. செப்பனியாவின் ஊழியத்திற்கு 80 வருஷங்களுக்கு முன்பாகவே எப்பிராயீம் தேசம் அழிந்துபோயிற்று.

விக்கிரகாராதனையின் ஆசாரியர்கள் கெம்மரீம் என்று அழைக்கப்படுகிறார்கள். (2இராஜா 23:5, ஓசி 10:5) இவர்களுக்கும், பாகாலின் ஆசாரியர்களுக்கும் வித்தியாசம் உள்ளது. இவர்கள் மேடைகளில் ஆசாரிய ஊழியம் செய்தார்கள். கருப்பு வஸ்திரங்கள் அணிந்திருப்பார்கள். எபிரெய மொழியில் கெம்மரீம் என்னும் வார்த்தைக்கு "கருப்பு" என்னும் பொருளும் உள்ளது (செப் 1:4).

"மல்காம்" என்னும் வார்த்தைக்கு "ராஜாவின் சிலை அல்லது ராஜாவாகிய தேவன்" (செப் 1:5) என்று பொருள்.

சங்காரம் பண்ணப்படும் பிரிவினர்

1. தேசத்தில் உண்டான மனுஷர்(செப். 1:3).
2. பாகாலில் மீதியாயிருக்கிறவர்கள். (செப். 1:4).
3. ஆசாரியர்களோடேகூட கெம்மரீம் என்பவர்களின் பேர்.
4. வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்கள். (செப். 1:5).
5. கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்கள்.
6. கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்கள்.
7. கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்கள். (செப். 1:6).

கர்த்தருடைய யாகத்தின் நாள் செப் 1:7-13

செப் 1:7. கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்.

செப் 1:8. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும்மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன்.

செப் 1:9. வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன்.

செப் 1:10. அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

செப் 1:11. மக்தேஷின் குடிகளே அலறுங்கள்; வர்த்தகரெல்லாரும் சங்காரமானார்கள்; காசுக்காரர் யாவரும் வெட்டுண்டுபோனார்கள்.

செப் 1:12. அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதித்து, வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமை செய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரை தண்டிப்பேன்.

செப் 1:13. அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும், அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்; அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை.

கர்த்தர் யூதாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமாக வரப்போகிறார். செப்பனியா அவர்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாள் யூதர்கள்மீது சீக்கிரத்தில் வரப்போகிறது.

யூதர்கள் இப்போது கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இது அவர்களுடைய நாள். அவர்கள் தங்களுடைய நாளிலே தங்களுக்குப் பிரியமானதையெல்லாம் செய்கிறார்கள். மனுஷர் தங்களுடைய நாளிலே கர்த்தரைத் தேடுவதுமில்லை. அவரைக் குறித்து விசாரிப்பதுமில்லை. கர்த்தருக்குப் பிரியமானதை செய்யாமல், தங்களுடைய மாம்சத்திற்குப் பிரியமானதை செய்கிறார்கள்.

கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது. செப்பனியா கர்த்தருடைய நாளை "கர்த்தருடைய யாகத்தின் நாள்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய நாளிலே யாகத்தை செலுத்துவார். தம்முடைய கனத்திற்கும், மகிமைக்கும் ஏற்பட்டிருக்கும் களங்கத்தையும், சேதத்தையும் செம்மைபண்ணுவார். பழுதுபார்த்துப் புதுப்பிப்பார்.

"கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்" (செப் 1:7) என்று செப்பனியா சொல்லுகிறார்.

கர்த்தருடைய யாகத்தின் நாளிலே, அவர் யாரையெல்லாம் தண்டிப்பார் என்னும் விவரம் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. ராஜகுடும்பத்தார் எல்லோரும் பெருமையாயும், ஆணவமாயும் இருக்கிறார்கள். கர்த்தர் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் தண்டிப்பார்.

யூதாதேசத்தாரில் சிலர் மறுதேசத்து வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். இது விநோதமான வஸ்திரம். அதிபதிகளும் ராஜகுமாரரும் மறுதேசங்களுக்கு விநோத வஸ்திரங்களை வாங்குவதற்காக போகிறார்கள். அல்லது தங்களுடைய வியாபாரிகளை அங்கே அனுப்பி, அந்த தேசத்திலிருந்து விநோத வஸ்திரங்களை வாங்கி அணிந்துகொள்கிறார்கள்.

மறுதேசத்து வஸ்திரங்களில் கண்ணியமில்லை. ஆனால் அதில் ஆடம்பரம் இருக்கிறது. அதிபதிகளும் ராஜகுமாரரும் மறுதேசத்து வஸ்திரங்களை அணிந்து பெருமைப்படுகிறார்கள். உயர்ந்த வஸ்திரங்களைத் தரித்தால்தான் ராஜகுமாரருக்கு திருப்தியாயிருக்கிறது. அவர்களுடைய உள்ளத்தில் பெருமையிருப்பதுபோலவே, அவர்களுடைய வஸ்திரங்களும் பெருமையாயும், ஆடம்பரமாயும் இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தர் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவனுக்கு கிருபை கொடுக்கிறார். அதிபதிகளும் ராஜகுமாரரும் மறுதேசத்து வஸ்திரம் தரித்து பெருமைப்படுவதினால், கர்த்தர் அவர்களை அழித்துப்போடுகிறார். அவர்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போயிருப்பதற்கு அவர்களுடைய மறுதேசத்து வஸ்திரம் அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய யாகத்தின் நாளிலே, வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் தண்டிப்பார் (செப் 1:9). யூதாவின் மனுஷரில் சிலர், தங்கள் தேசத்திலுள்ள ஏழைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் ஒடுக்குகிறார்கள். அவர்களுடைய வீடுகளையும், நிலங்களையும், சொத்துக்களையும் அபகரித்துக்கொள்கிறார்கள். இவர்கள் அனுமதியில்லாமல், மற்றவர்களுடைய வாசற்படியை தாண்டி, அவர்களுடைய வீடுகளுக்குள் பிரவேசித்து, அவர்களுக்கு தீங்கு செய்கிறார்கள்.

சரீரத்தில் வலிமையுள்ளவர்களும், தங்கள் கைகளில் அதிகாரமுள்ளவர்களும், திக்கற்றவர்களை வஞ்சித்து, அவர்களுடைய சொத்துக்களை தங்களுடையது என்று சொல்லி அபகரித்துக்கொள்கிறார்கள். கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் சம்பாதித்த பொருட்களினால் அவர்கள் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிறார்கள்.

"அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (செப் 1:10).

"மக்தேஷின் குடிகளே அலறுங்கள்; வர்த்தகரெல்லாரும் சங்காரமானார்கள்; காசுக்காரர் யாவரும் வெட்டுண்டுபோனார்கள்" (செப் 1:11) என்று செப்பனியா சொல்லுகிறார். ஒரு காலத்தில் செழித்திருந்தவர்கள் இப்போது வறுமையிலிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது வியாபாரமில்லை. அவர்களிடத்தில் இப்போது பணமுமில்லை.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைத் தேடுவதுமில்லை. கர்த்தரைக் குறித்து விசாரிப்பதுமில்லை. தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலே அவர்கள் அனலுமில்லாமல் குளிருமில்லாமல் இருக்கிறார்கள். கர்த்தர் இப்படிப்பட்ட நிர்விசாரமான ஜனங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களைத் தண்டிப்பார்.

"அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதித்து, வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமைசெய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரை தண்டிப்பேன்" (செப் 1:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எருசலேமை விளக்கைக் கொளுத்தி சோதித்துப் பார்ப்பார். கர்த்தருடைய பார்வையிலிருந்து விக்கிரகாராதனைக்காரன் ஒருவனும் தப்பிக்க முடியாது. இரகசியமாய்ப் பாவம் செய்கிறவனும் தப்பிக்க முடியாது.

அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும், அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்; அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை (செப் 1:13).

நிர்விசாரமாய் ஜீவிக்கிறவர்கள் கர்த்தருடைய சர்வவல்லமையை அங்கீகரிக்கமாட்டார்கள். அவருடைய சர்வஆளுகைக்கு கீழ்ப்படியமாட்டார்கள். நிர்விசாரமாயிருக்கிறவர்கள் உணர்வில்லாதவர்களாயிருப்பார்கள்.

கர்த்தர் பாவிகளைத் தண்டிப்பார். அவர்களை பேசக்கூடாதபடிக்கு மௌனமாக்குவார். தம்முடைய யாகத்தின் நாளிலே அவர்களை பலியாகச் செலுத்திவிடுவார். கர்த்தர் அவர்களை, அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுப்பார்.

கர்த்தருடைய நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகும் (செப் 1:10). எருசலேம் நகரம் முழுவதிலும், ஒரு வாசலிலிருந்து மற்றொரு வாசலுக்கு அலறுதலின் சத்தமும், மகாசங்காரத்தின் இரைச்சலுமுண்டாகும். யூதாதேசம் முழுவதும் கூக்குரலின் சத்தம் கேட்கப்படும்.

மேடுகளிலிருந்தும் மலைகளிலிருந்தும் மகாசங்காரத்தின் இரைச்சலுண்டாகும். எருசலேமைச் சுற்றிலும் பல மலைகள் உள்ளது. சத்துருக்கள் இந்த மலைகள் வழியாக ஊடுருவி வருவார்கள். அவர்கள் எருசலேமின் குடிகளை தங்கள் பட்டயங்களால் சங்காரம்பண்ணுவார்கள். அப்போது அந்த மேடுகளிலிருந்து மகாசங்காரத்தின் இரைச்சலுண்டாகும்.

எருசலேம் நகரம் அரணிப்பான நகரமென்றும், அது பாதுகாப்பான நகரம் என்றும் எருசலேமின் குடிகள் நம்புவார்கள். தங்களுக்கு எந்த ஆபத்தும் வராது என்று இறுமாப்பாயிருப்பார்கள். கர்த்தருடைய யாகத்தின் நாளிலே, எருசலேமின் குடிகளுக்கும் ஆபத்து வரும். அவர்களும் சங்காரமாவார்கள். அந்நாளிலே அவர்களும் வெட்டுண்டுபோவார்கள். அவர்களுடைய பொக்கிஷங்களெல்லாம் கொள்ளையிடப்படும்.

அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும், அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்; அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை (செப் 1:13).

எருசலேமின் குடிகள் தங்களுக்கு வீடுகளைக் கட்டுவார்கள். ஆனால் அதில் குடியிருக்கமாட்டார்கள். சத்துருக்கள் அவர்களுடைய வீடுகளில் குடியேறுவார்கள். எருசலேமின் குடிகள் திராட்சத்தோட்டத்தை நாட்டினாலும், அவர்களுடைய சத்துருக்களே, அவைகளின் பழரசத்தைக் குடிப்பார்கள்.

“பெண்ணை உனக்கு நியமிப்பாய், வேறொருவன் அவளுடன் சயனிப்பான்; வீட்டைக் கட்டுவாய், அதிலே குடியிருக்கமாட்டாய்; திராட்சத்தோட்டத்தை நாட்டுவாய், அதின் பலனை அனுபவிக்கமாட்டாய்” (உபா 28:30).

கர்த்தருடைய நாள்

செப். 1:17-18 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய நாளைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தீர்க்கதரிசனத்தின் இந்தப் பகுதி வருங்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிறைவேறும். கர்த்தருடைய நாளைப் பற்றிய விவரம் வருமாறு:

1. இது கர்த்தருடைய யாகத்தின் நாள். அர்மெகதோன் யுத்தத்தில் ஏராளமான ஜனங்கள் அழிக்கப்படுவதைப் பற்றி இந்த யாகம் குறிப்பிடுகிறது. (செப். 1:7-8; ஏசா 34:6; எரே 46:10; எசே 39:17-21; வெளி. 19:11-21).

2. இந்த யாகத்திற்கு விருந்தாளிகளைக் கர்த்தர் அழைத்திருக்கிறார். காட்டிலுள்ள மிருகங்களும், ஆகாயத்திலுள்ள பறவைகளும் அர்மெகதோனில் மரித்துப் போனவர்களின் பிரேதங்களைப் புசிக்கும். (எசே 39:17-21; மத் 24:27-28; லூக்கா 17:34-37; வெளி. 19:17-21).

3. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே அவர் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பார். (செப். 1:8-18).

4. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப்போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும், அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்; அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை. (செப். 1:13).

5. கர்த்தருடைய பெரியநாள். (செப். 1:14).

6. அந்த நாள் உக்கிரத்தின் நாள். (செப். 1:15).

7. அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்.

8. அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்.

9. அது இருளும் அந்தகாரமுமான நாள்.

10. அது மப்பும் மந்தாரமுமான நாள்.

11. அது எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள். (செப். 1:16)

12. மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப் போல் நடக்கும் நாள். (செப். 1:17).

13. அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும் நாள்.

14. கர்த்தருடைய உக்கிரத்தின் நாள். இதில் மனுஷர் யாரும் தப்புவதில்லை. (செப். 1:18)

மனுஷர் தண்டிக்கும் பிரிவினர்

1. அதிபதிகளும், ராஜகுமாரரும் (செப் 1:8)

2. மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிறவர்கள்.

3. வாசற்படியைத் தாண்டுகிறவர்கள். (செப். 1:9)

4. கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிறவர்கள்.

5. வர்த்தகர் (செப். 1:11)

6. காசுக்காரர்

7. வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்கள் (செப். 1:12)

கர்த்தர் யூதருக்கென்று விசேஷித்த வஸ்திரத்தைக் கொடுத்திருக்கிறார். அவருடைய வஸ்திரத்தின் நான்கு மூலைகளிலும் நீலநிறத்தில் தொங்கல்கள் இருக்கும். யூதருடைய வஸ்திரத்திற்கென்று வேறுசில குணாதிசயங்களும் உள்ளன. மறுதேசத்து வஸ்திரம் என்பது யூதருடைய வஸ்திரத்தைப் போன்றிருக்காது (செப் 1:8).

புறஜாதியார் தங்களுடைய விக்கிரகங்களின் கோவில்களுக்குள் போகும்போது அதன் வாசற்படியை மிதிப்பதற்குப் பதிலாக அதைத் தாண்டிச் செல்வார்கள். அல்லது அதன்மீது தவழ்ந்து செல்வார்கள். தாகோனின் ஆலயத்தில் பெலிஸ்தியர்கள் இதுபோன்று வாசற்படியைத் தாண்டுவது வழக்கம் (செப் 1:9).

எருசலேம் நகரத்தின் வடக்கு அலங்கத்தில் மீன்வாசல் உள்ளது (செப் 1:10). அந்திக் கிறிஸ்து இந்தத் திசையிலிருந்து எருசலேம் நகரத்திற்குள் வருவான். (எசே 38:15).

கர்த்தருக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசுகிறவர்கள் வண்டல்போலக் குழம்பியிருக்கிறார்கள் (செப் 1:12). திராட்சரசத்தில் வண்டல்களாகப் படிந்திருக்கும் ரசம் மிகவும் அடர்த்தியாக இருக்கும். அதுபோல மனுஷரும் தங்களுடைய குழப்பங்களில் அடர்த்தியாக இருக்கிறார்கள். அதிகமாகக் குழம்பியிருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகத் தூஷணமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். (எரே 48:11; சங் 55:19).

கர்த்தருடைய பெரியநாள் செப் 1:14-18

செப் 1:14. கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்துவருகிறது; கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்.

செப் 1:15. அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்.

செப் 1:16. அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்.

செப் 1:17. மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப்போல் நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும்.

செப் 1:18. கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடுதியாய் நிர்மூலம்பண்ணுவார்.

கல்தேயர் மூலமாய் யூதாவுக்கும் எருசலேமுக்கும் சீக்கிரமாய் அழிவு வரப்போகிறது. "கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்துவருகிறது" (செப் 1:14) என்று செப்பனியா சொல்லுகிறார். கர்த்தருடைய நாள் யூதாவின் மனுஷருக்கு அழிவின் நாளாகயிருக்கும்.

ரோமப்பேரரசு மூலமாய் எருசலேமுக்கு மகாஅழிவு உண்டாகும் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். கிறிஸ்துவானவர் சொன்ன பிரகாரம் எருசலேம் நகரம் முற்றிலுமாய் அழிந்துபோயிற்று.

கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது என்று செப்பனியா சொல்லுகிறார். வீட்டில் தீப்பிடித்து எரியும்போது, அந்த வீட்டிலுள்ளவர்கள், "தீ, தீ" என்று அலறுவார்கள். தங்கள் வீட்டிலுள்ளவர்களையும், அருகாமையிலுள்ள வீடுகளிலுள்ளவர்களையும் எச்சரிப்பார்கள். அதுபோலவே செப்பனியாவும், யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் எச்சரிக்கிறார்.

"கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான். அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்" (செப் 1:14,15) என்று செப்பனியா சொல்லுகிறார்.

"கர்த்தருடைய நாள்" என்னும் வாக்கியம் சொல்லப்படும்போதே, யூதாதேசத்திலுள்ள எல்லோரும் மனங்கசந்து அழுவார்கள். பராக்கிரமசாலிகளும் பயப்படுவார்கள். அவர்கள் குருடரைப்போல அங்குமிங்குமாக ஓடி அலைவார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தருடைய நாள் அவர்களுக்கு உக்கிரத்தின் நாளாகயிருக்கும். அது அவர்களுக்கு அழிவும், பாழ்க்கடிப்புமான நாளாகயிருக்கும். அது அவர்களுக்கு சந்தோஷத்தின் நாளாகயிருக்காது. அது அவர்களுக்கு மப்பும் மந்தாரமுமான நாளாகயிருக்கும். ஆகையினால் "கர்த்தருடைய நாள்" என்கிற சத்தத்திற்கு பராக்கிரமசாலிகளும், பலமுள்ளவர்களும், பெரியவர்களும், தலைவர்களும், பிரபுக்களும் மனங்கசந்து அழுவார்கள்.

யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய நாள் அழிவின் நாளாகயிருக்கும். "அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்" (செப் 1:16) என்று செப்பனியா சொல்லுகிறார்.

மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறார்கள். ஆகையினால், கர்த்தர் அவர்களை குருடரைப்போல் நடக்கும்படி அவர்களை வருத்தப்படுத்துவார்; அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும் (செப் 1:17).

துன்மார்க்கரைப்போல நடக்கிறவர்கள் குருடரைப்போல நடப்பார்கள். அவர்களுக்கு ஆரம்பமும் தெரியாது. முடிவும் தெரியாது. அவர்கள் எப்போதுமே கலக்கத்திலும், சந்தேகத்திலும், ஆபத்திலும் நடப்பார்கள்.

கர்த்தருடைய நாளிலே யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அழிந்துபோவார்கள். ஒருவரும் தப்பிக்கமாட்டார்கள். அவர்களுடைய ஐசுவரியமும், பொன்னும் வெள்ளியும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது. அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பித்து ஓடி ஒளிந்துகொள்ளவும் முடியாது.

"கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம்பண்ணுவார்" (செப் 1:18) என்று செப்பனியா சொல்லுகிறார்.

2 அதிகாரம்

தேசங்கள் மனந்திரும்பி கர்த்தரோடு சமாதானமாய் ஜீவிக்கவேண்டும் என்று செப்பனியா எல்லா ஜாதியாருக்கும் ஆலோசனை சொல்லுகிறார் (செப் 2:1-3). சத்துருக்கள் இஸ்ரவேல் தேசத்தாரை ஒடுக்கியபோது, இஸ்ரவேலுக்கு அண்டை தேசத்தாரில் அநேகர் சந்தோஷப்பட்டார்கள். இஸ்ரவேலை ஒடுக்க அவர்களுடைய சத்துருக்களுக்கு உதவி செய்தார்கள்.

செப்பனியா தீர்க்கதரிசி அப்படிப்பட்ட தேசங்களைப்பற்றி இங்கு சொல்லுகிறார். பெலிஸ்தர் (செப் 2:4-7). மோவாபும் அம்மோனும் (செப் 2:8-11). எத்தியோப்பியரும் அசீரியரும் (செப் 2:12-15).

விரும்பப்படாத ஜாதியே செப் 2:1-3

செப் 2:1. விரும்பப்படாத ஜாதியே, கட்டளை பிறக்குமுன்னும், பதரைப் போல நாள் பறந்துபோகுமுன்னும் கர்த்தருடைய உக்கிரகோபம் உங்கள்மேல் இறங்குமுன்னும், கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள்மேல் வருமுன்னும்,

செப் 2:2. நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்.

செப் 2:3. தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்.

கர்த்தருடைய நீதியான நியாத்தீர்ப்பு புறஜாதியார்மேலும் வரும். புறஜாதியாரை பயமுறுத்துவதற்காகவோ அல்லது அவர்களை கர்த்தரிடத்திலிருந்து துரத்தி விடுவதற்காகவே, செப்பனியா அவர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவர்களை கர்த்தரிடத்தில் வரவழைக்க வேண்டும் என்பதற்காகவே, செப்பனியா அவர்களுக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

புறஜாதியாரும் கர்த்தரிடத்திற்கு வரவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருக்கிற வேலைகளை அவர்கள் சரியாய்ச் செய்யவேண்டும். புறஜாதியாரும் தங்களுடைய வார்த்தையிலும் செய்கையிலும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேலுக்கு அண்டை தேசத்திலிருக்கிறவர்கள் புறஜாதியாராகவும், இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாகவும் இருக்கிறார்கள். இதன் நிமித்தமாக அவர்களை பயப்பட வைக்க வேண்டும் என்பது செப்பனியாவின் நோக்கமல்ல. அவர்கள் தங்களுடைய பாவங்களை நினைத்துப் பயப்படவேண்டும். தங்களுடைய பாவங்களினிமித்தமாய், தங்களுக்கு வரப்போகும் அழிவை நினைத்து நடுங்கவேண்டும்.

செப்பனியா எல்லா தேசத்தாரையும் கூடிவருமாறு அழைக்கிறார். "நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்" (செப் 2:2) என்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். செப்பனியா கர்த்தருடைய வார்த்தைகளை, விரும்பப்படாத ஜாதிக்கு சொல்லுகிறார்.

"விரும்பப்படாத ஜாதி" என்னும் வாக்கியம் கர்த்தரிடத்தில் கிட்டிச்சேருவதற்கு விரும்பாத ஜாதியைக் குறிக்கும். அவர்கள் இதுவரையிலும் கர்த்தருக்கு அருகாமையில் வருவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. கர்த்தரிடத்தில் வரவேண்டும் என்னும் ஆர்வமோ, வாஞ்சையோ, விருப்பமோ அவர்களிடத்தில் காணப்படவில்லை.

ஆனாலும் அவர்கள் எல்லோருமே ஒன்றாய்க்கூடி வரவேண்டுமென்று செப்பனியா சொல்லுகிறார். ஜனங்கள் மொத்தமாய்க் கூடிவந்து, கர்த்தருக்கு அருகாமையில் எப்படி போவது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் தங்களை உய்த்து ஆராய்ந்து சோதித்துப் பார்க்கவேண்டும். கர்த்தரிடத்தில் போகவேண்டுமென்று ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

விரும்பப்படாத ஜாதியாரிடத்தில் நற்குணம் எதுவுமில்லை. கர்த்தரிடத்தில் அவர்களைப்பற்றி பரிந்துபேசும் அளவுக்கு, அவர்களிடத்தில் நல்ல சுபாவம் எதுவும் காணப்படவில்லை. "விரும்பப்படாத ஜாதி" என்னும் வாக்கியத்திற்கு, "கர்த்தர் விரும்புகிற நற்குணம் எதுவும் இல்லாத ஜாதி" என்றும் பொருள் சொல்லலாம்.

புறஜாதி ஜனங்கள் விரும்பப்படாத ஜாதியாயிருந்தாலும், அவர்கள் கர்த்தரிடத்தில் கூடிவரவேண்டும். அவர்கள் தங்களைத் தாழ்த்தவேண்டும். விரும்பப்படாத ஜாதியார் எல்லோருமே தங்களை உய்த்து ஆராய்ந்து சோதித்துப் பார்க்கவேண்டும்.

புறஜாதியார் தங்களுடைய மனச்சாட்சிகளை சோதித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும். தங்களுடைய இருதயங்களை சோதித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் தங்களுடைய வழிகளை சோதித்துப் பார்க்கவேண்டும். புறஜாதியாரை மற்ற ஜாதியார் ஆராய்ந்து சோதிக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. அவர்கள் தங்களைத் தாங்களே ஆராய்ந்து, சோதித்துப் பார்க்கவேண்டும்.

அப்போது அவர்கள் தங்களிடத்திலுள்ள பாவங்களைக் கண்டுபிடிப்பார்கள். தாங்கள் கர்த்தருக்கு விரோதமான வழிகளில் போய்க்கொண்டிருப்பதையும் அவர்கள் புரிந்து கொள்வார்கள். புறஜாதியார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவருடைய கோபத்தை தங்கள்மேல் வரவழைத்துக் கொண்டதையும் அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

விரும்பப்படாத ஜாதியார் கர்த்தருடைய சமுகத்திலே சீக்கிரத்தில் கூடிச்சேரவேண்டும். காலம் கடந்து போவதற்கு முன்பாக அவர்கள் கர்த்தரிடத்தில் வந்து சேர வேண்டும். "கட்டளை பிறக்குமுன்னும், பதரைப்போல நாள் பறந்துபோகுமுன்னும் கர்த்தருடைய உக்கிரகோபம் உங்கள்மேல் இறங்கு முன்னும், கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள்மேல் வருமுன்னும், நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்" (செப் 2:1,2) என்று செப்பனியா சொல்லுகிறார்.

விரும்பப்படாத புறஜாதியார் ஏதோ வேடிக்கை பார்ப்பதற்காகவோ அல்லது விளையாட்டு காண்பிப்பதற்காகவோ அல்லது சந்தோஷமாக பொழுதுபோக்குவதற்காகவோ அவர்கள் கூடிவரக்கூடாது. அவர்கள் தங்களை உய்த்து ஆராய்ந்து சோதித்துப் பார்ப்பதற்காகவே கூடிவரவேண்டும். அவர்கள் கூடிவந்து கர்த்தரைத் தேடவேண்டும். கர்த்தருடைய நீதியைத் தேடவேண்டும். மனத்தாழ்மையைத் தேடவேண்டும்.

ஒரு தேசம் இரட்சிக்கப்படவேண்டுமென்றால், அந்த தேசத்திலுள்ள பரிசுத்தவான்கள், தங்கள் தேசத்திற்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசவேண்டும். பரிசுத்தவான்களின் எண்ணிக்கை குறைவாகயிருந்தாலும், அவர்கள் சிறுமையானவர்களாகயிருந்தாலும், அவர்களே கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்கள்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள், அவருடைய சமுகத்திலே கூடிவந்து, கர்த்தரையும், அவருடைய கிருபையையும், அவருடைய இரக்கத்தையும், அவருடைய சிலாக்கியத்தையும் தேடவேண்டும். கர்த்தர் தங்களுக்கு சொல்லியிருக்கிற வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வேண்டுமென்று அவரைத் தேடவேண்டும்.

நாம் கர்த்தரைத் தேடும்போது, கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தையும் உண்மையாயும், நேர்த்தியாயும் செய்யவேண்டும். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்கிறவர்கள், அவருடைய நியாயத்தை நடப்பிக்கவேண்டும்.

தேசத்திலுள்ள கர்த்தருடைய ஜனம் அவரைத் தேடும்போது, "ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்" (செப் 2:3) என்று செப்பனியா சொல்லுகிறார். கர்த்தருக்கு மீதமானவர்கள், தேசத்திலே சிறுமையானவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறார்கள். கர்த்தருக்கு மீதமானவர்கள், அவருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவார்கள்.

"உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்" (எரே 15:11).

கர்த்தருக்கு மீதமானவர்கள் பரலோகத்தை சுதந்தரிப்பார்கள். பரலோகத்திலே அவர்கள்மீது கர்த்தருடைய கோபம் வெளிப்படுத்தப்படமாட்டாது. அவர்கள் பூமியிலிருந்தாலும், பரலோகத்தின் பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்கும். அவர்கள் கர்த்தருடைய கோபத்தின் நாளிலே, அவருடைய கோபத்திற்கு மறைக்கப்படுவார்கள். கர்த்தருடைய ஆக்கினைக்குத் தப்பித்துக்கொள்வார்கள்.

பெலிஸ்தர்
செப் 2:4-7

செப் 2:4. காத்சா குடியற்று, அஸ்கலோன் பாழாகும்; அஸ்தோத்தைப் பட்டப் பகலிலே பறக்கடிப்பார்கள்; எக்ரோன் வேரோடே பிடுங்கப்படும்.

செப் 2:5. சமுத்திரக்கரை குடிகளாகிய கிரேத்தியருக்கு ஐயோ! பெலிஸ்தரின் தேசமாகிய கானானே, கர்த்தருடைய வார்த்தை உனக்கு விரோதமாயிருக்கிறது; இனி உன்னில் குடியில்லாதபடிக்கு உன்னை அழிப்பேன்.

செப் 2:6. சமுத்திரக்கரை தேசம் மேய்ப்பர் தங்கும் குடில்களும் ஆட்டுத்தொழுவங்களுமாகும்.

செப் 2:7. அந்த தேசம் யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வசமாகும்; அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்ப்பார்கள்; அஸ்கலோனின் வீடுகளிலே சாயங்காலத்திலே படுத்துக் கொள்வார்கள்; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார்.

இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிற அண்டை தேசத்தார்மீது கர்த்தருடைய கோபம் திரும்பியிருக்கிறது. நேபுகாத்நேச்சார் அவர்களை அழித்துப்போடுவான். கர்த்தருடைய கோபத்தின் நாளிலே, புறஜாதி ஜனங்கள் மறைக்கப்படமாட்டார்கள். கர்த்தருடைய நாள் மிகவும் பயங்கரமான நாளாயிருக்கும்.

புறஜாதி ஜனங்கள் கர்த்தருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணுகிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்கள்மீது ஆரம்பத்திலே தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தாமல், அவர்களுக்கு தம்முடைய அன்பையே வெளிப்படுத்துகிறார்.

அந்நிய தேசத்தார் கர்த்தருக்கு சத்துருக்களாகயிருந்தாலும், கர்த்தர் ஆரம்பத்தில் அவர்களுக்கு சிநேகிதராகவே இருக்கிறார். புறஜாதியார் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக யுத்தம் பண்ணினாலும், கர்த்தரோ புறஜாதிகளோடு உடனே யுத்தம்பண்ணாமல் அமைதியாயிருக்கிறார். புறஜாதிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று, கர்த்தர் பொறுமையோடு காத்துக் கொண்டிருக்கிறார்.

புறஜாதி ஜனங்களோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக துணிகரமாய்த் தீங்கு செய்கிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் புறஜாதியார்மேல் வருகிறது. கர்த்தர் இதுவரையிலும் புறஜாதியாருக்கும் சிநேகிதராயிருந்தார். ஆனால் இப்போதோ அவர் புறஜாதியாருக்கு சத்துருவாயிருக்கிறார். கர்த்தர் புறஜாதிகளுக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாகவும், அக்கிரமங்களினிமித்தமாகவும் கர்த்தர் அவர்களை நியாயந்தீர்க்கிறார். கர்த்தர் புறஜாதி தேசத்தாரை குடியில்லாதபடிக்கு அழித்துப்போடுவார்.

பெலிஸ்தர்மீதும், அவர்களுக்கு அருகாமையிலிருக்கிற புறஜாதி தேசங்கள்மீதும் கர்த்தருடைய கோபம் வருகிறது. அந்த தேசங்களெல்லாம் கர்த்தருடைய கோபத்தின் நாளிலே அழிந்துபோகும். அந்நிய தேசத்தார் கர்த்தருக்கும், அவருடைய ஜனத்திற்கும் பூர்வகாலம் முதலே சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களில் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக பழைய பகை காணப்படுகிறது. புறஜாதிகளெல்லோரும் சமுத்திரக்கரைகளில் குடியிருக்கிறார்கள். புறஜாதி தேசங்கள் பெருங்கடலின் கடற்கரைகளில் அமைந்திருக்கிறது.

"சமுத்திரக்கரை குடிகளாகிய கிரேத்தியருக்கு ஐயோ" (செப் 2:5) என்று செப்பனியா சொல்லுகிறார். கிரேத்தியர்கள் இஸ்ரவேல் தேசத்தின் எல்லைப்பகுதியில் வாசம்பண்ணுகிறார்கள். இவர்களும் பெலிஸ்தரோடு சேர்ந்து இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறார்கள்.

"நாங்கள் கிரேத்தியருடைய தென்புறத்தின்மேலும், யூதாவுக்கடுத்த எல்லையின்மேலும், காலேபுடைய தென்புறத்தின்மேலும், படையெடுத்துப்போய் சிக்லாகை அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டோம் என்றான்" (1சாமு 30:14).

செப்பனியா பெலிஸ்தருடைய தேசத்தை "கானான் தேசம்" என்று அழைக்கிறார். "பெலிஸ்தரின் தேசமாகிய கானானே, கர்த்தருடைய வார்த்தை உனக்கு விரோதமாயிருக்கிறது" (செப் 2:5) என்று செப்பனியா சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். பெலிஸ்தர்களும் கானான் தேசத்தில் குடியிருந்தார்கள். ஆகையினால் செப்பனியா கானான் தேசத்தை பெலிஸ்தருடைய தேசம் என்று சொல்லுகிறார்.

"காசா, அஸ்தோத், அஸ்கலோன், காத், எக்ரோன் என்கிற பட்டணங்களிலிருக்கிற பெலிஸ்தருடைய ஐந்து அதிபதிகளின் நாடும், ஆவியரின் நாடும்" (யோசு 13:3).

பெலிஸ்தரின் தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் இன்னும் சுதந்தரிக்கவில்லை. கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுத்த பின்பும், பெலிஸ்தர்கள் கானான் தேசத்தை ஆக்கிரமித்து, அதிலே வாசம் பண்ணுகிறார்கள்.

"பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளும், சகல கானானியரும், சீதோனியரும், பாகால் எர்மோன் துவக்கி ஆமாத்திற்குள் பிரவேசிக்கும்வரைக்கும் லீபனோனின் மலைகளிலே குடியிருக்கிற ஏவியருமே" (நியா 3:3).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு பெலிஸ்தருக்கு விரோதமாக அறிவிக்கப்படுகிறது. காத்சா குடியற்று, அஸ்கலோன் பாழாகும்; அஸ்தோத்தைப் பட்டப் பகலிலே பறக்கடிப்பார்கள்; எக்ரோன் வேரோடேபிடுங்கப்படும் (செப் 2:4).

காத்சா மொட்டையடிக்கப்படும் என்று எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். "காத்சா மொட்டையடிக்கப்படும்; அவர்களுடைய பள்ளத்தாக்கிலே மீதியாகிய அஸ்கலோன் சங்காரமாகும்; நீ எந்தமட்டுந்தான் உன்னைக் கீறிக்கொள்ளுவாய்" (எரே 47:5).

மகாஅலெக்சாண்டர் காத்சா பட்டணத்தை முற்றிலுமாய் அழித்துப் போட்டான். காத்சா வனாந்தரமாயிற்று. "பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான்" (அப் 8:26).

அஸ்தோத்தை பட்டப்பகலிலே பறக்கடிப்பார்கள் என்று செப்பனியா சொல்லுகிறார். இந்த தேசத்தில் வெயிலின் உஷ்ணம் அதிகமாயிருக்கும். சூரிய உஷ்ணத்தைத் தாங்கமுடியாமல் அஸ்தோத் தேசமே கருகிப்போயிருக்கும். அஸ்தோத்தின் பட்டணத்தார், எக்ரோன் பட்டணத்தாரைப்போலவே, அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போவார்கள். இவ்விரு பட்டணத்தாருமே வேரோடே பிடுங்கி அழிக்கப்படுவார்கள். இவ்விரண்டு பட்டணங்களும் பல காலமாக, வேர்பற்றி செழித்திருந்தது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இவற்றின்மீது வரும்போது, இவை வேரோடே பிடுங்கப்படுகிறது.

பெலிஸ்தருடைய பட்டணங்களில் ஜனங்கள் குடியிருக்கமாட்டார்கள். கர்த்தர் பெலிஸ்தருடைய தேசத்தை குடியில்லாதபடிக்கு அழித்துப்போடுவார். அவர்களுடைய சமுத்திரக்கரைகள், கப்பல் போக்குவரத்துக்கும், வியாபாரத்திற்கும் உதவியாயிருந்தது. அங்கே பல தேசத்து வணிகர்கள் குடியிருந்தார்கள்.

கர்த்தர் சமுத்திரக்கரைகளை குடியில்லாதபடி அழித்துப்போடுவதினால், சமுத்திரக்கரை தேசம் மேய்ப்பர் தங்கும் குடில்களும் ஆட்டுத்தொழுங்களுமாகும் (செப் 2:6).

இஸ்ரவேல் புத்திரரே கானான் தேசத்திற்கு சொந்தக்காரர்கள். கர்த்தர் கானான் தேசத்தை, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய ஜனம் கானான் தேசத்தை மறுபடியுமாய் சுதந்தரிப்பார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற யூதர்கள், கானான் தேசத்தை, தங்களுக்கு சொந்தமாக சுதந்தரித்துக்கொள்வார்கள். அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார்.

கானான் தேசம் யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வசமாகும்; அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்ப்பார்கள்; அஸ்கலோனின் வீடுகளிலே சாயங்காலத்திலே படுத்துக்கொள்வார்கள் (செப் 2:7).

மோவாபும் அம்மோனும் செப் 2:8-11

செப் 2:8. மோவாப் செய்த நிந்தனையையும், அம்மோன் புத்திரர் என் ஜனத்தை நிந்தித்து, அவர்கள் எல்லையைக் கடந்து பெருமைபாராட்டிச் சொன்ன தூஷணங்களையும் கேட்டேன்.

செப் 2:9. ஆகையால் மோவாப் சோதோமைப்போலும், அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப்போலுமாகி, காஞ்செறி படரும் இடமும், உப்புப் பள்ளமும், நித்திய பாழுமாயிருக்கும்; என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிட்டு, என் ஜாதியில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

செப் 2:10. அவர்கள் சேனைகளுடைய கர்த்தரின் ஜனத்துக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டி, அவர்களை நிந்தித்தபடியினால், இது அவர்கள் அகங்காரத்துக்குப் பதிலாக அவர்களுக்குக் கிடைக்கும்.

செப் 2:11. கர்த்தர் அவர்கள்மேல் கெடியாயிருப்பார்; பூமியிலுள்ள தேவர்களையெல்லாம் மெலிந்துபோகப் பண்ணுவார்; அப்பொழுது தீவுகளிலுள்ள சகல புறஜாதிகளும் அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்துகொள்வார்கள்.

மோவாபியரும் அம்மோன் புத்திரரும் லோத்தின் பூர்வ கோத்திரத்தார். மோவாப் தேசமும், அம்மோன் தேசமும் ஒன்றுக்கொன்று அருகாமையிலே இணைந்திருக்கிறது. இவ்விரு தேசத்தாரும் இணைந்து, கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்கிறார்கள். அவர்கள்மீது யுத்தம் செய்து ஜெயிக்கிறார்கள்.

கர்த்தர் மோவாப் செய்த நிந்தனையைப் பார்க்கிறார். அம்மோன் புத்திரர் தம்முடைய ஜனத்தை நிந்தித்தையும் கர்த்தர் பார்க்கிறார். அவர்கள் தங்களுடைய எல்லையைக் கடந்து பெருமை பாராட்டி சொன்ன தூஷணமான வார்த்தைகளையும் கர்த்தர் கேட்கிறார். இஸ்ரவேல் தேசத்தார் மோவாபின் எல்லையில் இருக்கிறார்கள். மோவாபியரும், அம்மோன் புத்திரரும், தங்களுடைய எல்லையைத்தாண்டி, இஸ்ரவேல் தேசத்திலிருக்கிற கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை கைவிட்டுவிட்டார் என்றும், அவர் சேனைகளின் கர்த்தராகயிருந்தாலும், அவரிடத்தில் பலமுமில்லை, பராக்கிரமமுமில்லை என்றும், மோவாபும் அம்மோனும் கர்த்தருக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். மோவாபும் அம்மோனும், தமக்கு விரோதமாகச் சொன்ன தூஷண வார்த்தைகளினிமித்தமாக, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது.

"ஆகையால் மோவாப் சோதோமைப்போலும், அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப்போலுமாகி, காஞ்செறி படரும் இடமும், உப்புப் பள்ளமும், நித்திய பாழுமாயிருக்கும்; என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிட்டு, என் ஜாதியில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" *(செப் 2:9)* என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

மோவாப் சோதோமைப்போல ஆகும். அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப்போல ஆகும். அவ்விரண்டு பட்டணங்களும் அழிந்துபோனதுபோல, இவ்விரண்டு தேசங்களும் அழிந்துபோகும். சவக்கடலிலே சோதோம் கொமோராவின் அழிவுக்கு அடையாளங்கள் காணப்படுகிறது. அந்த அழிவு இவ்விருதேசங்களுக்கும் அருகாமையிலிருக்கிறது. கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் உப்புப்பள்ளமாகவும், நித்திய பாழுமாகவும் தண்டித்திருக்கிறார். இந்தப் பட்டணங்களில் இனிமேல் யாரும் குடியேற முடியாதபடிக்கு, இவை பாழாய்ப்போயிற்று.

மோவாப் தேசத்திலும் அம்மோன் தேசத்திலும் இனிமேல் ஜனங்கள் குடியிருக்கமாட்டார்கள். அவர்களுடைய தேசம் பாழும் வனாந்தரமுமாகும். அங்கே இனிமேல் பயிர்கள் விளையாது. அங்கு காஞ்சொறி செடி படரும். ஒரு காலத்தில் கோதுமை விளைந்த நிலங்களில் இனிமேல் காஞ்சொறி முளைக்கும்.

மோவாபிலும் அம்மோனிலும் ஏராளமான நீரூற்றுக்கள் இருந்தன. கர்த்தர் இவ்விரு தேசத்தையும் அழித்தபோது, அங்கே நீரூற்றுக்கள் வற்றிப்போயிற்று. நீரூற்றுக்களெல்லாம் உப்புப்பள்ளமாயிற்று. மோவாப் தேசத்தாரும், அம்மோன் புத்திரரும் இஸ்ரவேல் ஜனத்திற்கு நிந்தை செய்ததினிமித்தமாகவும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பெருமை பாராட்டி, தூஷண வார்த்தைகளைச் சொன்னதினிமித்தமாகவும், அவர்களுடைய தேசங்கள் அழிந்துபோயிற்று. கர்த்தர் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்கிறார்.

மோவாபியரும், அம்மோன் புத்திரரும் சேனைகளுடைய கர்த்தரின் ஜனத்துக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டி அவர்களை நிந்தித்தபடியினால், இந்த அழிவு அவர்கள் அகங்காரத்துக்குப் பதிலாக அவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையாயிருக்கும் *(செப் 2:10)*.

மோவாப், அம்மோன் தேசத்தாரைப் போலவே, கர்த்தருடைய ஜனத்திற்கு நிந்தனை செய்த, எல்லா ஜாதியார்மீதும் தேவனுடைய கோபமும், அவருடைய நியாயத்தீர்ப்பும் வரும். அவர்களுடைய அகங்காரத்திற்குப் பதிலாக, அவர்களுக்கு அழிவு வரும்.

கர்த்தர் பெருமையுள்ள தேசத்தாரைத் தாழ்த்துவார் புறஜாதியாரின் தெய்வங்களை அழித்துப்போடுவார். விக்கிரகாராதனைக்காரர்கள் தங்களுடைய விக்கிரகங்களைக் குறித்து பெருமை பாராட்டினார்கள். கர்த்தரோ பூமியிலுள்ள அந்நிய தேவர்களையெல்லாம் மெலிந்து போகப்பண்ணுகிறார். கர்த்தர் விக்கிரகாராதனைக்காரர்மேல் கெடியாயிருப்பார் *(செப் 2:11)*.

இந்தப் பூமியிலே, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம், மனுஷர் மத்தியிலே பிரசங்கிக்கப்படும். அப்போது தீவுகளிலுள்ள சகல புறஜாதிகளும் அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்து கொள்வார்கள் *(செப் 2:11)*. கர்த்தரை ஆராதிப்பதற்காக யாரும் எருசலேமுக்கு போகவேண்டிய அவசியம் இருக்காது. ஜனங்கள் எந்த ஸ்தானத்திலிருக்கிறார்களோ, அந்த ஸ்தானத்திலிருந்தே, இஸ்ரவேலின் தேவனாகிய, சேனைகளுடைய கர்த்தரை பணிந்துகொள்ளலாம்.

எத்தியோப்பிரும் அசீரியரும் செப் 2:12-15

செப் 2:12. எத்தியோப்பியராகிய நீங்களும் என் பட்டயத்தினால் கொலைசெய்யப்படுவீர்கள்.

செப் 2:13. அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி, அசீரியாவை அழித்து நினிவேயைப் பாழும் வனாந்தரத்துக்கொத்த வறட்சியுமான ஸ்தலமாக்குவார்.

செப் 2:14. அதின் நடுவில் மந்தைகளும் ஜாதிஜாதியான சகல மிருகங்களும் படுத்துக்கொள்ளும்; அதினுடைய சிகரங்களின்மேல் நாரையும் கோட்டானும் இராத்தங்கும்; பலகணிகளில் கூவுகிற சத்தம் பிறக்கும்; வாசற்படிகளில் பாழ்க்கடிப்பு இருக்கும்; கேதுருமரங்களின் மச்சைத் திறப்பாக்கிப்போடுவார்.

செப் 2:15. நான்தான், என்னைத்தவிர வேறொருவரும் இல்லை என்று தன் இருதயத்தில் சொல்லி, நிர்விசாரமாய் வாழ்ந்து களிகூர்ந்திருந்த நகரம் இதுவே; இது பாழும் மிருகஜீவன்களின் தாபரமுமாய்ப் போய்விட்டதே! அதின் வழியாய்ப் போகிறவன் எவனும் ஈசல் போட்டுத் தன் கையைத் கொட்டுவான்.

எத்தியோப்பியரும் அசீரியரும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு ஏராளமான தீங்குகளை செய்தார்கள். ஆசாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு இவர்கள் மூலமாய் மிகுந்த நெருக்கங்களும், உபத்திரவங்களும் உண்டாயிற்று.

"அவர்களுக்கு விரோதமாக எத்தியோப்பியனாகிய சேரா பத்துலட்சம் பேர்கள் சேர்ந்த சேனையோடும் முந்நூறு இரதங்களோடும் புறப்பட்டு மரேசாமட்டும் வந்தான்" *(2நாளா 14:9)*.

எத்தியோப்பியருக்கும் அசீரியருக்கும் விரோதமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. "எத்தியோப்பியராகிய நீங்களும் என் பட்டயத்தினால் கொலை செய்யப்படுவீர்கள்" *(செப் 2:12)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய பட்டயமாக இருக்கிறான். கர்த்தர் தம்முடைய சத்துருக்களை அழிப்பதற்கு, நேபுகாத்நேச்சாரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். நினிவே அசீரியருடைய தலைநகரம். கர்த்தர் முதலாவதாக எத்தியோப்பியரை தம்முடைய பட்டயத்தினால் கொலைசெய்கிறார். அவர்களுக்கு அழிவு உண்டாயிற்று. அதன் பின்பு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அசீரியர்மீது வருகிறது.

கர்த்தர் அசீரியரின் தலைநகரமாகிய நினிவே பட்டணத்தை அழித்துப்போடுவார். அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி, அசீரியாவை அழித்து நினிவேயைப் பாழும் வனாந்தரத்துக்கொத்த வறட்சியுமான ஸ்தலமாக்குவார் *(செப் 2:13)*.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக, அசீரியரை தம்முடைய சினத்தின் கோலாகப் பயன்படுத்தினார். இப்போது கர்த்தர் அசீரியருக்கு விரோதமாக, பாபிலோனை தம்முடைய சினத்தின் கோலாகப் பயன்படுத்துகிறார்.

"என் கோபத்தின் கோலாகிய அசீரியனுக்கு ஐயோ! அவன் கையிலிருக்கிறது என் சினத்தின் தண்டாயுதம்" *(ஏசா 10:5)*.

நினிவே நகரம் ஜனம் பெருத்ததாகவும், பலமுள்ளதாகவும் இருந்தது. அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்தார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்தார்கள். கர்த்தர் அசீரியாவை அழித்துப்போடுகிறார். நினிவேயை பாழும் வனாந்தரமுமாக்குகிறார். நினிவே நகரம் கர்த்தருடைய கோபத்தினால் வறட்சியான ஸ்தலமாயிற்று.

நினிவே நகரத்திலே ஏராளமான ஜனங்கள் ஐசுவரியத்தோடும், ஆடம்பரத்தோடும் வாசம்பண்ணினார்கள். மனுஷர்கள் இருந்த இடத்திலே இப்போது விலங்குகள் இருக்கிறது. நினிவேயின் ஜனங்கள் தங்களுடைய சந்தோஷத்தில் ஆனந்த கீதங்களைப் பாடுவது வழக்கம். இப்போதோ அந்த நகரத்தில் நாரையும் கோட்டானும் கூவுகிறது.

நினிவேயின் நடுவில் மந்தைகளும் ஜாதிஜாதியான சகல மிருகங்களும் படுத்துக்கொள்ளும்; அதினுடைய சிகரங்களின் மேல் நாரையும் கோட்டானும் இராத்தங்கும்; பலகணிகளில் கூவுகிற சத்தம் பிறக்கும்; வாசற்படிகளில் பாழ்க்கடிப்பு இருக்கும் *(செப் 2:14)*. கர்த்தர் கேதுருமரங்களின் மச்சைத் திறப்பாக்கிப்போடுவார்.

நினிவே நகரத்தார் தங்கள் இருதயத்தில் பெருமையோடிருந்தார்கள். அவர்கள் ஆணவத்தோடும், அகம்பாவத்தோடும் மற்றவர்களுக்கு தீங்கு செய்தார்கள். கர்த்தர் நினிவே நகரத்தின் ஆணவத்தையும் பெருமையையும் பற்றிச் சொல்லும்போது, "நான்தான், என்னைத்தவிர வேறொருவரும் இல்லை என்று தன் இருதயத்தில் சொல்லி, நிர்விசாரமாய் வாழ்ந்து களிகூர்ந்திருந்த நகரம் இதுவே" *(செப் 2:15)* என்று சொல்லுகிறார்.

பெருமையான நினிவே நகரம் தாழ்த்தப்படுகிறது. கர்த்தர் நினிவேயை அழித்துப்போடுகிறார். ஆடம்பரமாயிருந்த நினிவே நகரம் இப்போது பாழும், மிருகஜீவன்களின் தாபரமுமாய்ப் போய்விடுகிறது. மற்ற தேசத்து ஜனங்கள் நினிவே நகரத்தின் வழியாகப் போகும்போது, அதன் அழிவைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். நினிவேக்கு விரோதமாக ஏளனம்பண்ணுகிறார்கள். அந்த நகரத்தைப் பரியாசம்பண்ணுகிறார்கள். நினிவேயின் வழியாய் போகிறவன் எவனும் ஈசல்போட்டு தங்கள் கைகளைக் கொட்டுகிறார்கள்.

3 அதிகாரம்

யூதாதேசத்திலே பாவமும் துன்மார்க்கமும் அதிகமாயிருக்கிறது. எருசலேமின் குடிகளுடைய பாவங்களை செப்பனியா தீர்க்கதரிசி கர்த்தருடைய நாமத்தினாலே கடிந்துகொள்கிறார். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று அவர்களை எச்சரிக்கிறார் (செப் 3:1-7).

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது இன்னும் கிருபையையும், இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியின் கிரியைகளை நடப்பிப்பார். அவர்களுடைய பாவக்கறைகளை அவர்களை விட்டு நீக்கி, அவர்களை சுத்திகரிப்பார். கர்த்தர் அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களை அழைத்துக்கொண்டு வருவார் (செப் 3:8-13).

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக, தம்முடைய மகிமையான இரட்சிப்பின் கிரியைகளை நடப்பிப்பார் (செப் 3:14-20). கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் புதிய ஏற்பாட்டுக்காலத்தில், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாய் நிறைவேறும்.

எருசலேம் நகரத்துக்கு ஐயோ செப் 3:1-7

செப் 3:1. இடுக்கண் செய்து, ஊத்தையும் அழுக்குமாயிருக்கிற நகரத்துக்கு ஐயோ!

செப் 3:2. அது சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; அது கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவில்லை; அது கர்த்தரை நம்பவில்லை; அது தன் தேவனிடத்தில் சேரவில்லை.

செப் 3:3. அதற்குள்ளே இருக்கிற அதின் அதிபதிகள் கெர்ச்சிக்கிற சிங்கங்கள்; அதின் நியாயாதிபதிகள் சாயங்காலத்தில் புறப்படுகிறதும் விடியற்காலமட்டும் ஒரு எலும்பையும் மீதியாக வைக்காததுமான ஓநாய்கள்.

செப் 3:4. அதின் தீர்க்கதரிசிகள் வீண்பெருமையும் வஞ்சகமுமுள்ளவர்கள்; அதின் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, வேதத்துக்கு அநியாயஞ்செய்தார்கள்.

செப் 3:5. அதற்குள் இருக்கிற கர்த்தர் நீதியுள்ளவர்; அவர் அநியாயஞ்செய்வதில்லை; அவர் குறைவில்லாமல் காலைதோறும் தம்முடைய நியாயத்தை விளங்கப்பண்ணுகிறார்; அநியாயக்காரனோ வெட்கம் அறியான்.

செப் 3:6. ஜாதிகளைச் சங்கரித்தேன்; அவர்கள் துருகங்கள் பாழாயின; அவர்களுடைய வீதிகளை ஒருவரும் கடந்து போகாதபடிக்குப் பாழாக்கினேன்; அவர்களுடைய பட்டணங்கள் மனுஷர் இல்லாதபடிக்கும் குடியில்லாதபடிக்கும் அவாந்தரையாயின.

செப் 3:7. உன் வாசஸ்தலம் நிர்மூலமாகாதபடிக்கு நீ எனக்குப் பயந்து, கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள் என்றேன்; நான் அவர்களை எப்படி தண்டித்தாலும், அவர்கள் அதிகாலையில் எழுந்து தங்கள் கிரியைகளையெல்லாம் கெடுத்தார்கள்.

செப்பனியா தீர்க்கதரிசி எருசலேமின் பொதுவான பாவங்களையும், அதன் அக்கிரமங்களையும் இங்கு சொல்லுகிறார். எருசலேம் தனக்குத்தானே அவமானமாயிருக்கிறது. அது தன்னைத்தானே கெடுத்துக்கொள்கிறது. எருசலேமின் பாவம் ஊத்தையும் அழுக்குமாயிருக்கிறது. எருசலேம் தன்னுடைய பாவங்களினால் தனக்கு இடுக்கண் செய்துகொள்கிறது (செப் 3:1).

எருசலேம் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை. அது கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவில்லை; அது கர்த்தரை நம்பவில்லை; அது தன் தேவனிடத்தில் சேரவில்லை (செப் 3:2).

எருசலேம் கொழுத்திருக்கிறது. அது தன்னுடைய மாம்சத்திற்குப் பிரியமான காரியங்களை மாத்திரம் செய்கிறது. ஆனால் அது தன்னுடைய ஆவிக்குரிய காரியங்களில் கொஞ்சமும் கவனம் செலுத்தவில்லை. எருசலேமின் மூலமாய் மற்ற ஜாதியாருக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் புறப்பட்டுப் போகவில்லை. எருசலேம் மற்ற தேசங்களுக்கு முன்பாக கர்த்தருக்கு சாட்சியாகயில்லை.

எருசலேம் தன்னுடைய ஜனங்களுக்கும் இடுக்கண் செய்கிறது. தனக்கு அருகாமையிலுள்ள அந்நிய ஜனங்களுக்கும் இடுக்கண் செய்கிறது. இதனால் கர்த்தருடைய கோபம் எருசலேமின்மீது வந்திருக்கிறது. கர்த்தர் எருசலேமின் குடிகளுக்கு தம்முடைய பிரமாணங்களைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவுமில்லை.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரை நம்பாமல், அந்நிய தேசத்தாரை நம்புகிறார்கள். கர்த்தர் எருசலேமின் குடிகளோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். ஆனால் எருசலேமின் குடிகளோ, கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்கள் உடன்படிக்கையை மீறுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் தங்களுடைய பாதுகாப்புக்காக அந்நிய தேசத்தாரோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அந்நிய தேசத்தாரின் பராக்கிரமசாலிகளும், யுத்தவீரர்களும் தங்களுக்கு பாதுகாப்பாயிருப்பார்கள் என்று அவர்களை நம்புகிறார்கள். கர்த்தருடைய ஜனம், கர்த்தரை நம்பாமல், அந்நிய ஜாதியாரை நம்புகிறது.

எருசலேம் நகரத்தார் கர்த்தரை நம்பவுமில்லை. அவர்கள் தங்கள் தேவனாகிய சேனைகளின் கர்த்தரிடத்தில் சேரவுமில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகியே இருக்கிறார்கள். சர்வவல்லமையுள்ள தேவன் தங்களோடு கூடயிருக்கக்கூடாது என்றும், அவர் தங்களைவிட்டு விலகிப்போய்விடவேண்டும் என்றும் எருசலேமின் குடிகள் விரும்புகிறார்கள்.

எருசலேம் நரகத்திலே வாசம்பண்ணுகிற சாதாரண ஜனங்களும் பாவிகளாயிருக்கிறார்கள். அதன் தலைவர்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அதற்குள்ளே இருக்கிற அதின் அதிபதிகள் கெர்ச்சிக்கிற சிங்கங்கள்; அதின் நியாயாதிபதிகள் சாயங்காலத்தில் புறப்படுகிறதும் விடியற்காலமட்டும் ஒரு எலும்பையும் மீதியாக வைக்காததுமான ஓநாய்கள் (செப் 3:3).

எருசலேம் நகரத்திற்குள்ளே இருக்கிற அதிபதிகளும், நியாயாதிபதிகளும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் அநியாயமும், அக்கிரமமும் பண்ணுகிறார்கள். எருசலேமிலே நீதியும் நியாயமும், சத்தியமும் உண்மையும் காணப்படுவதற்கு இந்த தலைவர்கள் உதவிசெய்ய வேண்டும். ஆனால் இவர்களே, எருசலேமின் குடிகள் மத்தியில் பாவங்களையும், அக்கிரமங்களையும் பரப்புகிறார்கள். நீதிக்குத் துணையாகயிருக்கவேண்டியவர்கள், அக்கிரமத்திற்கு துணைபோகிறார்கள்.

மருத்துவர்கள் மனுஷருடைய நோய்களைக் குணப்படுத்தவேண்டும். ஊரிலே நோயை அகற்றவேண்டும். ஆனால் இந்த மருத்துவர்களே நோயாளிகளாக இருக்கிறார்கள். மருத்துவர்களே ஜனங்கள் மத்தியிலே நோயைப் பரப்புகிறார்கள். எருசலேமின் அதிபதிகள் கெர்ச்சிக்கிற சிங்கங்களைப்போலவும், அதின் நியாயாதிபதிகள் பட்சிக்கிற ஓநாய்களைப் போலவும் ஜனங்களுக்கு தீங்கு செய்கிறார்கள்.

கெர்ச்சிக்கிற சிங்கங்களையும், பட்சிக்கிற ஓநாய்களையும் யாரும் விரும்பமாட்டார்கள். அவற்றை வெறுத்து ஒதுக்குவார்கள். அதிபதிகளும் நியாயாதிபதிகளும் ஏழைகளை ஒடுக்குகிறார்கள். திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் தீங்கு செய்கிறார்கள். ஓநாய் எலும்பைக்கூட மீதியாக வைக்காமல், தன்னுடைய இரையைப் பட்சிப்பதுபோல, எருசலேம் நகரத்திலுள்ள தலைவர்களும், ஜனங்களுக்கு ஒன்றையும் மீதியாய் வைக்காமல், எல்லாவற்றையும் பட்சித்துப் போடுகிறார்கள்.

"அவன் இனத்தார்களில் திருப்தியாகாதவனைக் காண்பிப்பவன் யாரென்று என் கூடாரத்தின் மனுஷர் சொல்லார்களோ?" *(யோபு 31:31)*.

தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு, அதை ஜனங்களுக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லவேண்டும். தீர்க்கதரிசிகள் பரலோகத்திலுள்ள தேவனுக்கும், பூமியிலுள்ள மனுஷருக்கும் இடையே கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார்கள். மனுஷர் மத்தியிலே அநீதியும், அக்கிரமமும் காணப்படும்போது, தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினாலே, ஜனங்களை எச்சரிக்கிறார்கள்.

ஆனால் எருசலேமிலுள்ள தீர்க்கதரிசிகளோ வீண் பெருமைக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து எந்த ஒரு வெளிப்பாட்டையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களை கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் என்று சுயமாய் விளம்பரம்பண்ணுகிறார்கள். தங்களுடைய சொந்தக் கற்பனைகளை, கர்த்தருடைய வெளிப்பாடுகள் என்று, ஜனங்களுக்கு பொய்த்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளையும், அவர்களுடைய கள்ளத்தீர்க்க தரிசனங்களையும் நாம் நம்பக்கூடாது. அவர்களுடைய வார்த்தையில் உண்மையிருக்காது. அவர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்தம் இருக்காது. அவர்களிடத்தில் தெளிந்த சிந்தனையுமில்லை. கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய ஞானத்தையும், புத்தியையும், வெளிப்பாடுகளையும் கொடுக்கவில்லை.

தீர்க்கதரிசிகளைப்போலவே, ஆசாரியர்களும் மாய்மாலக்காரராயிருக்கிறார்கள். ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள். அவர்கள் வேதத்திற்கு அநியாயம் செய்கிறார்கள். ஆசாரியர்கள் தேவாலயத்தை பரிசுத்தம்பண்ணவேண்டும். அதில் அசுத்தமில்லாதவாறு, ஆசாரியர்கள் அதை சுத்திகரிக்கவேண்டும். ஆனால் ஆசாரியர்களே பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கி, அதைத் தீட்டுப்படுத்துகிறார்கள்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய வேதத்தை ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும். கர்த்தருடைய சத்தியங்களை ஜனங்களுக்கு விளக்கி, வியாக்கியானம் சொல்லவேண்டும். ஆனால் ஆசாரியர்களோ, தங்களுக்கு இஷ்டமான பிரகாரம் வேதத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள். ஆசாரியர்களுக்கு கர்த்தருடைய வேதத்தின் இரகசியமும், அதின் மகிமையும் தெரியவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து சத்தியத்தைக் கற்றுக்கொள்வதில்லை.

கர்த்தருடைய வேதம் பரிசுத்தமானது. ஜனங்கள் மத்தியிலே சத்திய வசனத்தைபற்றிய அறிவு பரவுவதற்கு ஆசாரியர்கள் உதவியாயிருக்கவேண்டும். ஆனால் எருசலேமிலுள்ள ஆசாரியர்களோ வேதத்திற்கு அநியாயம் செய்கிறார்கள்.

எருசலேமிலே, எல்லா இடங்களிலும், பாவமும் அநியாயமும் காணப்படுகிறது. எருசலேம் முழுவதிலும் அக்கிரமம் நிரம்பியிருக்கிறது. எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். எருசலேமின் குடிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. ஆனாலும் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் அவர்கள் மத்தியிலே காணப்படுகிறது.

எருசலேமிலிருக்கிற ஜனங்களும், அதிபதிகளும், நியாயாதிபதிகளும், தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் அநீதியுள்ளவர்களாகவும், அநியாயம் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனாலும், எருசலேமிற்குள் இருக்கிற கர்த்தர் நீதியுள்ளவர். அவர் அநியாயம் செய்வதில்லை. கர்த்தர் குறைவில்லாமல், காலைதோறும், தம்முடைய நியாயத்தை விளங்கப்பண்ணுகிறார் *(செப் 3:5)*.

கர்த்தர் நீதியும் பரிசுத்தமுமுள்ளவர். மனுஷருடைய பாவமும், அக்கிரமமும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பாயிருக்கிறது. கர்த்தர் அநீதியை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணராயிருக்கிறார்.

"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தைக் கண்டு, உன்னை விட்டுப் போகாதபடிக்கு, உன் பாளயம் சுத்தமாயிருக்கக்கடவது" *(உபா 23:14)*.

நாம் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கும்போது கர்த்தர் நம்மைத் தண்டிக்கிறார். நாம் பிறருக்கு விரோதமாக தீங்கு செய்யும்போதும் கர்த்தர் நம்மைத் தண்டிக்கிறார். கர்த்தர் தம்முடைய நியாயத்தை மனுஷர் மத்தியிலே விளங்கப்பண்ணுவதற்காக, தீர்க்கதரிசிகளை அனுப்பினார். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை அதிகாலையில் எழுப்பி, அவர்களை ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்காக அனுப்புகிறார். கர்த்தர் காலைதோறும் தம்முடைய நியாயத்தை குறைவில்லாமல் விளங்கப்பண்ணுகிறார்.

காலையில் சூரியன் உதிக்கும்போது, கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளையும் எழுப்புகிறார். சூரியன் இந்தப் பூமிக்கு வெளிச்சம் கொடுப்பதுபோல, ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு வெளிச்சம் கொடுக்கிறார்கள். இருளிலிருக்கிற ஜனங்கள், வெளிச்சத்தைக் கண்டுகொள்வதற்கு உதவிசெய்கிறார்கள். அவர்கள் தங்கள் சமாதானத்திற்குரிய வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

கர்த்தருடைய நீதியும் நியாயத்தீர்ப்பும் ஜனங்கள் மத்தியில் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தப்படுகிறது. ஜனங்கள் பாவம் செய்யும்போது கர்த்தர் அவர்களை எச்சரிக்கிறார். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு கிடைக்கும். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்த் தொடர்ந்து பாவம் செய்தால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வரும்.

கர்த்தர் பாவிகளைத் தண்டிப்பார் என்பதற்கு, புறஜாதியார்கள் எடுத்துக்காட்டுக்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் புறஜாதியாரின் அழிவைப் பார்க்கிறார்கள்.

"ஜாதிகளைச் சங்கரித்தேன்; அவர்கள் துருகங்கள் பாழாயின; அவர்களுடைய வீதிகளை ஒருவரும் கடந்து போகாதபடிக்குப் பாழாக்கினேன்; அவர்களுடைய பட்டணங்கள் மனுஷர் இல்லாதபடிக்கும் குடியில்லாதபடிக்கும் அவாந்தரையாயின" *(செப் 3:6)* என்று கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பின் விளைவுகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

"நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்ய வேண்டாம்" *(லேவி 18:28)*.

"ஜாதிகளை சங்கரித்தேன்" என்னும் வாக்கியத்திற்கு, கர்த்தர் கானான் தேசத்திலுள்ள, ஏழுஜாதிகளை சங்கரித்தார் என்பது பொருளாகும். இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ள அந்நிய தேசத்தாரை, கர்த்தர் சங்கரித்தார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு அழிவு வந்தது. "ஜாதிகளை சங்கரித்தேன்" என்னும் வாக்கியம், இஸ்ரவேல் தேசத்திற்கு அண்டை தேசத்திலுள்ள ஜாதியாரின் சங்காரத்தையும் குறிக்கலாம்.

புறஜாதிகளின் துருகங்கள் பாழாயிற்று. அவர்களுடைய வீதிகளும் பாழாயிற்று. அவர்களுடைய பட்டணங்களும் பாழாயிற்று. பட்டணத்தில் ஒருவருமில்லை. அவர்களுடைய பட்டணங்கள் மனுஷர் இல்லாதபடிக்கும், குடியில்லாதபடிக்கும் அவாந்தரையாயிற்று.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய நியாயத்தீர்ப்பின் கோலால் தண்டிக்கிறார். எருசலேமின் குடிகள் கர்த்தருடைய தண்டனையின் கோலை ஏற்றுக்கொள்ளவேண்டும். தங்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் தங்களை கடிந்துகொள்வதை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்குப் பயப்படவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் துணிகரமாகப் பாவம் செய்தால் கர்த்தருடைய தண்டனை தங்கள்மீது வரும் என்றும், தங்களுடைய வாசஸ்தலம் நிர்மூலமாகும் என்றும் அவர்கள் பயப்படவேண்டும். ஆனால் அவர்களிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமுமில்லை. அவர்களுக்கு கர்த்தரிடத்தில் பக்தியுமில்லை.

கர்த்தர் யூதாவின் மனுஷரை அவர்களுடைய பாவங்களினிமித்தமாய்த் தண்டிக்கிறார். கர்த்தர் அவர்களை எப்படித் தண்டித்தாலும், அவர்கள் அதிகாலையில் எழுந்து, தங்கள் கிரியைகளையெல்லாம் கேடாக்குகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் மத்தியிலே அனுப்புகிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய ஊழியக்காரர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகவும் தங்களுடைய கதவுகளை அடைத்து, அதற்கு தாழ்ப்பாள்போட்டு மூடிவிடுகிறார்கள்.

இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை செப் 3:8-13

செப் 3:8. ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி, ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்.

செப் 3:9. அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்.

செப் 3:10. எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலிருந்து என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறவர்களாகிய சிதறடிக்கப்பட்டவர்களின் குமாரத்தியானவன் எனக்குக் காணிக்கை கொண்டுவருவான்.

செப் 3:11. எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின, நீ செய்த உன் எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பாய்; அப்பொழுது நான் உன் பெருமையைக்குறித்துக் களிகூர்ந்தவர்களை உன் நடுவிலிருந்து விலக்கிவிடுவேன்; நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டாய்.

செப் 3:12. உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்.

செப் 3:13. இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை; அவர்கள் பொய் பேசுவதுமில்லை; வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை; அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொள்வார்கள்.

எருசலேம் கர்த்தருடைய பரிசுத்த நகரம் என்று நல்ல பெயர் பெற்று விளங்கிற்று. ஆனால் இப்போதோ அதனுடைய பெயர் கெட்டுப்போயிற்று. எருசலேமின் கிரியைகளெல்லாம் ஒரு காலத்தில் பரிசுத்தமாயிருந்தது. ஆனால் இப்போதோ அதன் கிரியைகள் கேடாயிருக்கிறது.

எருசலேமுக்கு ஒரு தீங்கும் வராது என்று எருசலேமின் குடிகள் நினைத்தார்கள். கர்த்தர் தங்களைப் பாதுகாப்பார் என்று நம்பினார்கள். ஆனால் எருசலேமிலே இருக்கிற அதின் அதிபதிகளும், நியாயாதிபதிகளும், தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் அக்கிரமக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள். அவர்கள் வேதத்திற்கு அநியாயம் செய்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் எருசலேமை உடனே அழித்துப்போடாமல், அவர்கள்மீது பொறுமையாயிருக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று காத்துக்கொண்டிருக்கிறார்.

ஆனால், எருசலேமின் குடிகளோ தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் அதிகரிக்கிறது. அவர்கள் அதிகமதிகமாய் அக்கிரமங்களும் அநியாயங்களும் செய்கிறார்கள். "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள்" (செப் 3:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நியாயப்பிரமாணம் யாரையும் பரிசுத்தமாக்காது. ஆனாலும் தங்களுடைய பாவங்களைப் புரிந்துகொள்வதற்கு, நியாயப்பிரமாணம் அவர்களுக்கு உதவிசெய்யும். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் மனந்திரும்புவார்கள் என்று பரிசுத்தவான்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பக்தியுள்ளவர்கள் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் அழுது ஜெபம்பண்ணுகிறார்கள். அநியாயக்காரனோ வெட்கம் அறியான்.

யூதாதேசத்திற்காக கர்த்தரிடத்தில் அழுது புலம்புகிறவர்கள், கர்த்தருடைய சமுகத்திலே காத்திருக்கவேண்டும். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்தில் அனுப்பும் வரையிலும் அவர்கள் காத்திருக்க வேண்டும். கிறிஸ்துவானவர் ஜனங்களின் பாவங்களை மன்னித்து, அவர்களை இரட்சிப்பதற்காக இந்த உலகத்திற்கு வருவார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஜனத்தை பரிசுத்தப்படுத்துவார். அவர்கள் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருப்பார்கள். யூதரும் புறஜாதியாரும் இரட்சிக்கப்படுவார்கள். எருசலேமிலே தங்கள் மீட்புக்காக காத்திருக்கிறவர்கள் இருப்பார்கள். அவர்கள் நீண்டகாலம் தங்கள் ஆத்தும இரட்சிப்புக்காக காத்திருந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த இரட்சிப்பு, காலம் நிறைவேறியபோது, இயேசுகிறிஸ்து மூலமாய் அவர்களுக்கு வந்து சேர்ந்தது.

"அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்" (லூக் 2:38).

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் சர்வசிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்படுகிறது. எல்லா தேசங்களிலுமுள்ள, எல்லா ஜாதியார் மத்தியிலும், எல்லா பாஷைக்காரர் மத்தியிலும் கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. இரட்சிக்கப்படுகிறவர்கள் இயேசுகிறிஸ்துவின் சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களெல்லோரும், சபையின் தலையாகிய கிறிஸ்துவின் சமுகத்திற்கு முன்பாக கூடிவருகிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இந்தப் பூமியிலே தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், தேவனுடைய ராஜ்யம் இந்தப் பூமியிலே ஸ்தாபிக்கப்படவில்லை. தம்முடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரையிலும் கர்த்தர் தம்முடைய சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக்கூட்டவும் தீர்மானம்பண்ணினார்; பூமியெல்லாம் கர்த்தருடைய எரிச்சலின் அக்கினியினால் அழியும் (செப் 3:8).

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் இந்த உலகத்தில் பிரசங்கிக்கப்படுவதற்கு, யூதரும் புறஜாதியாரும் தடையாகயிருப்பார்கள். சுவிசேஷத்திற்கு சத்துருவாகயிருக்கிறவர்களை கர்த்தர் தம்முடைய எரிச்சலின் அக்கினியினால் அழிப்பார். அவர்கள்மேல் தம்முடைய சினமாகிய உக்கிரகோபத்தையெல்லாம் சொரிவார்.

இஸ்ரவேலை மறுபடியும் கூட்டிச்சேர்க்கவும், அவர்களை மறுபடியும் புதுப்பித்து ஸ்தாபிக்கவும் கர்த்தர் தீர்மானம்பண்ணியிருக்கிறார். யூதர்களுடைய பக்தியும் நீதியும் அப்போது புதுப்பிக்கப்படும். அவர்கள் மத்தியிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகும். கர்த்தர் ஒரு தேசத்தை ஆசீர்வதிக்கும்போது, முதலாவதாக அந்த தேசத்திலுள்ள ஜனங்களை பரிசுத்தப்படுத்துகிறார். அதன்பின்பு அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறார். முதலாவது பரிசுத்தம். அதன் பின்பு சந்தோஷம். இதுவே கர்த்தருடைய நியதி.

"அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (செப் 3:9) என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

யூதர்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த சேதத்திற்கு திரும்பி வந்தபோது, கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி நிறைவேறிற்று. மனுஷருடைய ஜீவியத்திலும், அவர்களுடைய சிந்தையிலும், பழக்க வழக்கங்களிலும், பேச்சிலும் மறுமலர்ச்சி உண்டாகும்.

கர்த்தர் அவர்களுடைய பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவார். அவர்களுடைய பாஷை இதுவரையிலும் அசுத்தமாயிருந்தது. அவர்கள் அவிசுவாச வார்த்தைகளையும், தூஷணவார்த்தைகளையும், அசுத்தமான வார்த்தைகளையும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கர்த்தர் அவர்களுடைய பாஷையை சுத்தமான பாஷையாக மாற்றுகிறார். அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உப்பினால் சாரமேற்றப்பட்டதாகயிருக்கிறது.

நாம் கர்த்தருக்குள் வரும்போது பழையவைகள் ஒழிந்துபோகும். எல்லாம் புதிதாகும். கர்த்தர் நம்மை இரட்சிக்கும்போது, நமக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறார். நம்முடைய வாயின் வார்த்தைகளையும் புதுப்பிக்கிறார். நம்முடைய பேச்சில் பரிசுத்தம் இருக்கும். நாம் ஞானமுள்ள வார்த்தைகளையும், ஆவிக்குரிய வார்த்தைகளையும் தெளிவாகப் பேசுவோம். நம்முடைய சிந்தையும் வார்த்தையும் தெளிவாயிருக்கும்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். அப்போது அவர்களுடைய பாஷையும், கானான் தேசத்தில் இருக்கிறவர்களுடைய பாஷையும் ஒன்றாய்க் கலக்கிறது. யூதர்கள் எபிரெய பாஷையோடு அஸ்தோத்தின் பாஷையையும் கலந்து பேசுகிறார்கள்.

"அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சில் பாதி அஸ்தோத் பாஷையாயிருந்தது; இவர்கள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத்தவிர, யூதபாஷையைத் திட்டமாய்ப் பேச அறியாதிருந்தார்கள்" (நெகே 13:24).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுடைய பாஷையில் அசுத்தமும், ஏமாற்றுத்தனமும், பொய்யும், பித்தலாட்டமும் கலந்திருந்தது. கர்த்தர் அவர்களுடைய பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுகிறார். அவர்களுடைய பழைய பாஷை அவர்களை விட்டு அகன்றுபோகிறது. அவர்கள் கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்தமான பாஷையைப் பேசுகிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் ஒருமனப்பட்டு கர்த்தருக்கு ஆராதனை செய்யும்படி கூடிவருகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பலிகளைச் செலுத்துவதற்குப் பதிலாக, தூபங்களைக் காண்பிப்பதற்கு பதிலாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறார்கள். அவர்கள் ஒருமனப்பட்டு கர்த்தருக்கு ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் கர்த்தருக்கு ஆவிக்குரிய ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் துதியினாலும், ஸ்தோத்திரங்களினாலும், ஜெபத்தினாலும் கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். அவரை மகிமைப்படுத்துகிறார்கள். கர்த்தரே தங்களுடைய துதிகளுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும் பாத்திரர் என்பதை அங்கீகரிக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் ஒருமனப்பட்டு கர்த்தரை ஆராதிக்கிறார்கள். நிலத்தை உழும்போது, இரண்டு மாடுகள் நுகத்திலே கட்டப்பட்டிருக்கும். அந்த மாடுகள்மீது நுகம் சுமத்தப்பட்டிருக்கும். அந்த மாடுகள் இரண்டும் ஒன்றுபோல நடக்கவேண்டும். ஒற்றுமையாய் வேலை செய்யவேண்டும். அப்போதுதான் நிலத்தை உழ முடியும்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களும், கர்த்தரை ஆராதிக்கும்படி ஒருமனப்பட்டு, ஒன்றுகூடி வந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஒருமையின் ஆவியும், ஒருமனப்பாட்டின் ஆவியும் காணப்படுகிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் தோளோடு தோள்கொடுத்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒருமனப்பட்டு அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். ஊழியக்காரர்கள் ஒற்றுமையாயும், ஒருமனப்பட்டும் ஊழியம் செய்யும்போது, ஊழியமும் சிறப்பாகயிருக்கும். ஊழியக்காரரும் உற்சாகமாயிருப்பார்கள். நம்முடைய பரிசுத்தமே நம்மை ஒருமனப்பாட்டின் பாதையிலே வழிநடத்தும். பரிசுத்தமில்லாமல் ஒருமனப்படுவதற்கு வாய்ப்பில்லை.

யூதர்களுடைய மனதிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. பிரிந்திருந்த அவர்கள் இப்போது கர்த்தரை ஆராதனை செய்யும்படிக்கு ஒருமனப்பட்டு கூடிவந்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரும், எருசலேமின் குடிகளும், யூதாவின் மனுஷரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்திலே சிதறிப்போகப்பண்ணினார். சிதறிப்போன யூதர்கள் மறுபடியும் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். கர்த்தரும் அவர்களை தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்வார்.

"எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலிருந்து என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறவர்களாகிய சிதறடிக்கப்பட்டவர்களின் குமாரத்தியானவள் எனக்குக் காணிக்கை கொண்டுவருவாள்" (செப் 3:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலிருந்து" என்னும் வாக்கியத்திற்கு, வெகுதொலைவிலிருந்து அல்லது தூரதேசத்திலிருந்து என்று பொருள். அவர்கள் எந்த தேசத்திலிருந்தாலும், கர்த்தருடைய இரட்சிக்கும் கிருபையினால், அவர்களுடைய புத்தி தெளியும். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரைப்பற்றி நினைத்துப் பார்ப்பார்கள்.

கெட்ட குமாரன் தன்னுடைய தகப்பனை விட்டுப் பிரிந்து தூரதேசத்திற்குப்போனான். அவனுக்கு புத்தி தெளிந்தபோதோ, அவன் மறுபடியும் தன் தகப்பனுடைய வீட்டிற்கு திரும்பி வந்தான். அதுபோலவே அந்நிய தேசங்களுக்கு சிதறடிக்கப்பட்ட யூதர்கள், கர்த்தருடைய சமுகத்திற்கு திரும்பி வருவார்கள். அவர்கள் கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்.

கர்த்தருடைய ஜனம் எந்தெந்த தேசங்களுக்கெல்லாம் சிதறிப்போயிருக்கிறார்களோ, அங்கெல்லாம் சிதறடிக்கப்பட்டவர்களின் குமாரத்தியானவள் இருக்கிறாள். கர்த்தர் அவர்களெல்லோரையும் தம்மிடத்தில் கூட்டிச்சேர்ப்பார். அவர்கள் எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலிருந்தாலும், அவர்கள் அங்கே இருந்து கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுவார்கள். அவர்கள் அந்நிய தேசங்களிலிருந்து தங்களுடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் கர்த்தரிடத்தில் ஏறெடுப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜெபவீட்டிற்கு வெகுதூரத்திலிருந்தாலும், அங்கேயிருந்தும் அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுவார்கள்.

சிதறடிக்கப்பட்டவர்களின் குமாரத்தியானவள், தூரதேசத்திலிருந்து கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வருவாள். அவர்கள் தங்களையே கர்த்தருக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பார்கள். கர்த்தருக்கு ஆவிக்குரிய பலிகளைச் செலுத்துவார்கள்.

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோம 12:1).

"எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, நீ செய்த உன் எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பாய்" (செப் 3:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். பாவிகள் மறுபடியும் பாவம் செய்யும்போது வெட்கப்படமாட்டார்கள். அவர்கள் துணிகரமாய், வெட்கப்படாமல் பாவம் செய்வார்கள். கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணினவர்கள் வெட்கப்பட மாட்டார்கள்.

பாவிகள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, தங்களுடைய பழைய பாவங்களை நினைத்து வெட்கப்படுவார்கள். கர்த்தர் தங்களுடைய பாவங்களை மன்னிக்கும்போது, தாங்கள் செய்த எல்லா பாவங்களையும் நினைத்து அவர்கள் வெட்கமும் வேதனையும் அடைவார்கள்.

"நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது, நீ நினைத்து வெட்கி, உன் நாணத்தினால் உன் வாயை இனித் திறக்கமாட்டாதிருப்பாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (எசே 16:63).

"அப்பொழுது நான் உன் பெருமையைக்குறித்துக் களிகூர்ந்தவர்களை உன் நடுவிலிருந்து விலக்கிவிடுவேன்" (செப் 3:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருடைய பெருமையையும், மாய்மாலத்தையும் அவர்கள் நடுவிலிருந்து விலக்கிவிடுவார்.

மாய்மாலக்காரர்கள் வெளிவேஷம் போடுகிறார்கள். அவர்கள் வெளிப்பார்வைக்கு அலங்காரமாகவும், அழகாகவும் தோற்றமளிப்பார்கள். அவர்கள் தங்கள் பெருமையைக் குறித்து களிகூருவார்கள். எருசலேம் நகரம் பரிசுத்தமான நகரமென்றும், அது கர்த்தருடைய பரிசுத்தமான ஸ்தலம் என்றும் சொல்லி பெருமைப்படுவார்கள்.

எருசலேமின் குடிகள் தங்கள் ஊரைச்சுற்றிலுமிருக்கிற பரிசுத்த பர்வதத்தை நினைத்து அகங்காரம் கொள்கிறார்கள். எருசலேம் நகரத்தைக் குறித்து பெருமைப்படுகிறார்கள். தாங்கள் பரிசுத்த பர்வதத்திலிருப்பதினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வராது என்று இறுமாப்பாய் நினைக்கிறார்கள். கர்த்தரோ அவர்களுடைய பெருமையை அவர்களைவிட்டு விலக்கிவிடுவார். "நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டாய்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பெருமையும், அகந்தையும், அகங்காரமும் கர்த்தருக்கு விரோதமான பாவம். பெருமைப்படுகிறவன் தன்னை ஒரு பரிசுத்தவான்போல காண்பித்துக்கொள்வான். ஆனால் பெருமையும், அகந்தையும், அகங்காரமும் பரிசுத்தத்திற்கு சத்துருவாயிருப்பவனுடைய சுபாவங்கள்.

கர்த்தருக்கு மீதியானவர்களிடத்தில் பெருமையும், அகந்தையும், அகங்காரமும் இருக்காது. அவர்கள் சிறுமையும் எளிமையுமான ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திலே பெருமையானவனை விலக்கிவிடுவார். சிறுமையானவனை மீதியாக வைப்பார்.

"உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்" *(செப் 3:12)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு மீதியானவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் பரிசுத்தமாயும், சமாதானமாயும் ஜீவிப்பார்கள். அவர்களுடைய பேச்சுக்களிலும், கிரியைகளிலும் பரிசுத்தம் இருக்கும்.

இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை; அவர்கள் பொய் பேசுவதுமில்லை; வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை; அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொள்வார்கள் *(செப் 3:13)*.

சீயோன் குமாரத்தி
செப் 3:14-20

செப் 3:14. சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இஸ்ரவேலரே, ஆர்ப்பரியுங்கள்; எருசலேம் குமாரத்தியே, நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு.

செப் 3:15. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

செப் 3:16. அந்நாளிலே எருசலேமைப் பார்த்து, பயப்படாதே என்றும், சீயோனைப் பார்த்து, உன் கைகளைத் தளரவிடாதே என்றும் சொல்லப்படும்.

செப் 3:17. உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.

செப் 3:18. உன் சபையின் மனுஷராயிருந்து, பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்ளுவேன்.

செப் 3:19. இதோ, அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்; நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்ளுவேன்; அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன்.

செப் 3:20. அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டுவருவேன்; அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக்கொள்ளுவேன்; உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதர்களுடைய பாவங்களை அவர்கள் நடுவிலிருந்து விலக்கிப்போடுவதாக வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்குத்தத்தைத் தொடர்ந்து, கர்த்தர் அவர்களுடைய வேதனைகளையும், பாடுகளையும், கஷ்டங்களையும் அவர்கள் நடுவிலிருந்து விலக்கிப்போடுவதாக வாக்குப்பண்ணுகிறார்.

யூதாவின் மனுஷர் அனுபவிக்கும் பாடுகளுக்கு அவர்களுடைய பாவங்களே காரணம். பாவங்களை அவர்கள் நடுவிலிருந்து நீக்கிவிட்டால், அவர்களுக்கு பாடுகளும் பிரச்சனைகளும் இருக்காது. ஒவ்வொரு விளைவுக்கும் ஒரு காரணமிருக்கும். காரணத்தை நீக்கிப்போட்டால் அது ஒரு விளைவையும் ஏற்படுத்தாது.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு சந்தோஷத்தைக் கட்டளையிடுகிறார். அவர்களை மகிழ்ந்து களிகூருமாறு அன்போடு சொல்லுகிறார். "சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இஸ்ரவேலரே, ஆர்ப்பரியுங்கள்; எருசலேம் குமாரத்தியே, நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு" (செப் 3:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர்மீது அன்புகூருகிறவர்கள், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பார்கள். கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருவதற்கு அவர்களுடைய இருதயத்தில் இடமிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் கர்த்தர்மீது அன்பு இருக்கும்போது, அங்கே கர்த்தருக்குள் சந்தோஷமும் இருக்கும்.

"அந்நாளிலே எருசலேமைப் பார்த்து, பயப்படாதே என்றும், சீயோனைப் பார்த்து, உன் கைகளைத் தளரவிடாதே என்றும் சொல்லப்படும்" (செப் 3:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாயும், தம்முடைய தெய்வீக பராமரிப்புக்கள் மூலமாயும், தம்முடைய செய்தியை எருசலேமின் குடிகளுக்கு சொல்லுகிறார்.

எருசலேமின் குடிகளும், "பயப்படாதே" என்று ஒருவருக்கொருவர் ஆறுதலாகச் சொல்லிக்கொள்வார்கள். "உங்கள் கைகளை உயர்த்தி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுங்கள்" என்றும் எருசலேமின் குடிகளுக்கு சொல்லப்படும். சீயோனைப் பார்த்து, உன் கைகளைத் தளரவிடாதே என்றும் சொல்லப்படும். எருசலேமின் குடிகள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தங்கள் கைகளை உயர்த்தி, கர்த்தரிடத்திலிருந்து தங்களுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் ஆக்கினைகளை அகற்றிவிட்டார். அவர்களுடைய சத்துருக்களை விலக்கிவிட்டார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த தண்டனைகளையும் நிறுத்திவிட்டார். இஸ்ரவேல் தேசத்திலே இனிமேல் யுத்தத்தின் சத்தம் கேட்கப்படாது. தேசம் யுத்த ஆரவாரமில்லாமல் அமைதியாயிருக்கும்.

"இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்" என்று செப்பனியா சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்தில் இனிமேல் பஞ்சமோ, பட்டினியோ இருக்காது. அவர்கள் மறுபடியும் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போவதில்லை. கர்த்தர் அவர்களுடைய சத்துருக்களையெல்லாம் விலக்கிவிட்டார். இப்போது கர்த்தரே அவர்களுக்கு நடுவில், இஸ்ரவேலின் ராஜாவாயிருக்கிறார்.

நம்முடைய பாவங்களே நம்முடைய ஆக்கினைகளுக்கு காரணம். நம்முடைய பாவங்கள் நம்மைவிட்டு நீங்கிவிட்டால், ஆக்கினையும் நம்மைவிட்டு நீங்கிவிடும். நம்முடைய ஆக்கினைக்கு நாம் தப்பிக்கவேண்டுமென்றால், நம்முடைய பாவங்களுக்கு நாம் விலகி ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்துகொண்டு, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதற்கு வாய்ப்பில்லை. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். இதற்காக அவர்களுடைய பாவங்களை, அவர்கள் நடுவிலிருந்து முதலாவதாக அகற்றி விடுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்குப் பிரியமான ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவர்கள் நடுவிலே இருக்கிறது. "உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவிலிருக்கிறார்" (செப் 3:17) என்று செப்பனியா சொல்லுகிறார். பூமியின் நடுவில் சூரியன் இருப்பதுபோல, எருசலேமின் நடுவிலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் இருக்கிறார். சூரியனுடைய வெளிச்சம் உலகம் முழுவதிலும் பிரகாசமாயிருப்பதுபோல, கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம், இஸ்ரவேல் தேசம் முழுவதற்கும் வெளிச்சமாயிருக்கும்.

கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார். அவர் அவர்கள் நடுவிலே இஸ்ரவேலின் ராஜாவாகவும் இருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்குரியவர்கள். அவர்கள் நடுவிலிருக்கிற, அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்.

"கர்த்தர் இரட்சிப்பார்" (செப் 3:17) என்று செப்பனியா சொல்லுகிறார். கர்த்தர் இயேசுகிறிஸ்துவாகயிருப்பார். இரட்சகராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தின் பாவங்களை மன்னிக்கிறவர். அவர் உலக இரட்சகர்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நன்மை செய்வார். அவர் இஸ்ரவேல் வம்சத்தாரின் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து களிகூருவார். பாவிகள் மனந்திரும்புவது கர்த்தருக்கு சந்தோஷமாயிருக்கும். பரிசுத்தவான்கள் ஆறுதல் பெறுவது தேவதூதர்களுக்கு சந்தோஷமாயிருக்கும். கர்த்தர் தாமே தம்முடைய பரிசுத்தவான்கள்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து களிகூருகிறார்.

கர்த்தர் தம்முடைய அன்பின் நிமித்தம் அமர்ந்திருப்பார். கர்த்தர் தம்முடைய அன்பிலே அமைதியாயிருப்பார். அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் பேரில் கெம்பீரமாய் களிகூருவார்.

சீயோனிலே துக்கப்படுகிறவர்களும், அழுது புலம்புகிறவர்களும் இருப்பார்கள். கர்த்தர் அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பார். துக்கப்படுகிறவர்களுக்கு ஆறுதலைக் கொடுப்பார். "உன் சபையின் மனுஷராயிருந்து, பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்ளுவேன்" (செப் 3:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சீயோன் துக்கித்துப் புலம்புகிறது. சீயோனிலே ஏராளமான வேதனைகளும், துக்கங்களும் இருக்கிறது. எருசலேம் நகரம் அழிந்துபோயிற்று. எருசலேமின் அரமனைகளெல்லாம் இடிக்கப்பட்டு பாழாய்க்கிடக்கிறது. தேசத்திலே வியாபாரமோ, தொழிலோ நடைபெறவில்லை.

எருசலேமிலுள்ள தேவாலயமும் அழிந்துபோயிற்று. கல்தேயர்கள் கர்த்தருடைய பலிபீடத்தையும் உடைத்துப்போட்டார்கள். பண்டிகைகள் ஆசரிக்கப்படவில்லை. தங்களுடைய நகரம் அழிந்துபோனதைவிட, தேவாலயம் அழிந்துபோனதையும், பண்டிகைகள் ஆசரிக்கப்படாமல் இருப்பதையும் பார்த்து சீயோன் அழுது புலம்புகிறது.

இஸ்ரவேல் புத்திரர் வருஷத்திற்கு மூன்றுதரம், பண்டிகைகளை ஆசரிப்பதற்காக எருசலேமுக்கு வருவது வழக்கம். ஆனால் எருசலேமில் இப்போது பண்டிகை ஆசரிப்பு இல்லை. இதனால் சீயோன் குமாரத்திக்கு நிந்தையும் சஞ்சலமும் உண்டாயிற்று. அவள் தன்னுடைய வேதனை தாங்காமல் கர்த்தருக்கு முன்பாக அழுது புலம்புகிறாள்.

இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களை அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போகப்பண்ணுகிறார். அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்களால் எருசலேம் நகரத்திற்குப்போய், அங்கே கர்த்தருடைய பண்டிகைகளை பரிசுத்தமாய் ஆசரிக்க முடியவில்லை. அவர்கள் அதை நினைத்து சஞ்சலப்படுகிறார்கள்.

அந்நிய தேசங்களிலே சிதறிப்போயிருக்கிற தம்முடைய ஜனத்தை கர்த்தர் மறுபடியும் கூட்டிச்சேர்ப்பார். அவர்களை மறுபடியும் எருசலேமுக்கு அழைத்து வருவார். "நான் அவர்களை ஏகமாய்க் கூட்டிக்கொள்வேன்" (செப் 3:18) என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போது அவர்களுடைய நிந்தை நீங்கும். அவர்களுடைய சஞ்சலங்கள் முடிவுபெறும். அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்.

இஸ்ரவேல் வம்சத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்புக்களிலிருந்து அவர்களை விடுவிப்பார். அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களை மறுபடியும் கூட்டிச்சேர்ப்பார்.

"இதோ, அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்; நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்ளுவேன்; அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன்" (செப் 3:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரை சிறுமைப்படுத்தின சத்துருக்களை கர்த்தர் தண்டிப்பார். அவர்களுடைய ஆலோசனைகளை அவமாக்கிப்போடுவார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவருடைய ஜனத்திற்கு மறுபடியும் காண்பிக்கப்படும். கர்த்தர் தம்முடைய ஜனத்தை இரட்சிப்பார். அவர்கள் எந்தெந்த தேசங்களில் வெட்கத்தை அனுபவித்தார்களோ, அந்த தேசங்களிலே அவர்களுக்கு புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகும்.

"அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டுவருவேன்; அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக்கொள்ளுவேன்; உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன்" (செப் 3:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கும்போது, அவர்களுக்கு புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகும். யூதர்கள் சிறையிருப்புக்குப்போனபோது, சீயோன் பாழும் வனாந்தரமுமாயிருந்தது. சீயோனை எந்த மனுஷனும் பாதுகாப்பதில்லை என்று புறஜாதிகள் ஏளனமாய்ப் பேசினார்கள். கர்த்தர் சீயோனை கைவிட்டுவிடவில்லை. கர்த்தர் சீயோனைப் பாதுகாக்கிறார்.

எஸ்தர் ராஜாத்தியின் காலத்தில் யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்தது. கர்த்தர் யூதர்களை ஆசீர்வதித்ததினால், இந்த பயம் ஜனங்களுக்கு உண்டாயிற்று.

"ராஜாவின் வார்த்தையும் அவனுடைய கட்டளையும் போய்ச்சேர்ந்த எல்லா நாடுகளிலும், எல்லாப் பட்டணங்களிலும், யூதருக்குள்ளே அது மகிழ்ச்சியும், களிப்பும், விருந்துண்டு கொண்டாடும் நல்ல நாளுமாயிருந்தது; யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் யூதமார்க்கத்தில் அமைந்தார்கள்" (எஸ் 8:17).

செப்பனியா - விரிவுரை
ZEPHANIAH - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தர் தம்முடைய சபையைப் பாதுகாக்கிறார். கர்த்தரை நம்புகிற விசுவாசிகள் செழித்திருப்பார்கள். உலகப்பிரகாரமான ஜனங்கள், கர்த்தருடைய சபையும், அவருடைய ஜனங்களும் செழித்திருப்பதைப் பார்ப்பார்கள். தம்மை நம்புகிற விசுவாசிகளை, கர்த்தர் சகல ஜனங்களுக்குள்ளும், கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பார்.